பாரதமணி

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
295, லிங்க செட்டி தெரு, மதராஸ்

வருஷ சந்தா { உள்நாடு ரூ. 4
வெளிநாடு ரூ. 6

மாலை 4	ஞாயிறு 22-9-40 விக்ரம௵ புரட்டாசி மீ 7உ	முத்து 16

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
உலக வர்த்தமானம்		418
ஹிட்லரின் படையெடுப்பு		420
உதிர்ந்த மணிகள்		421
குவலயாநந்த ஸுபாஷிதம்...	ய. மஹாலிங்க சாஸ்திரி எம். ஏ., பி. எல்.	422
ப்ரச்நோத்ர ரத்ந மாலிகை	வரகவி. திரு. அ. சுப்ரமண்யபாரதி	424
கிராமசேவை	பண்டித ஏ. எஸ். ரங்காதாச்சாரி	426
யூனிபார்ம் டின்னர்	ஜானகி	427
குத்பா பரிசு	ஏ. முகம்மது ரஷீத்	430
காணமற் போன மோதிரம்	ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாசன்	436
சிறுவர் பகுதி	எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி	440

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



உலக வர்த்தமானம்

ஐரோப்பாவில் தற்சமயம் விமான யுத்தம்தான் முக்கியமானதாகக் கருதப்பட்டு வருகிறது. நாளுக்குநாள் ஜெர்மன் விமானங்கள் லண்டன் பிரதேசத்தைத் தாக்குவதிலும், ராயல் விமானப்படை பெர்லின் நகரைத் தாக்குவதிலும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. லண்டன் நகரில் சில கட்டிடங்கள் ஜெர்மன் விமானப்படை எடுப்பால் சிறிதளவு சேதமடைந்ததாகத் தெரிகிறது. அவைகளில் பார்லிமெண்டு கட்டிடமும் ஒன்று என்று செய்தி கூறுகின்றது. ஸெய்ண்ட் பால்ஸ் கட்டிடம் விமானத் தாக்குதலால் சேதமடையாமல் தப்பித்துக்கொண்டது என்று கடைசியாக வந்த செய்திகள் கூறுகின்றன. பிரிட்டிஷ் ராயல் விமானப்படை பெர்லின் நகரில் மிக்க சேதத்தையுண்டு பண்ணிற்று என்று பிரிட்டிஷ் விமானப்படை தளபதி ராஜீய முறையில் விடுத்த அறிக்கையிலிருந்து விளங்குகிறது. ஜெர்மன் பார்லிமெண்ட் கட்டிடம் (ரீச்ஸ்டாக்) சின்னபின்னமாக்கப்பட்டது என்று தெரிகிறது. பெரும் விமானப்படை எடுப்புகளால் ஜெர்மனி மிகுந்த நஷ்டமடைந்தபோதிலும், ஹிட்லர் பெரும் விமானப் படையெடுப்பில் தமக்குள்ள நம்பிக்கையை விடவில்லை என்ற ஹேஷ்யங்கள் தெரிகின்றன.

சென்ற வாரம் சர்ச்சில் ரேடியோ பிரசங்கத்தில் பிரிட்டனின் தற்கால நிலைமையைப்பற்றித் தெளிவாகப் பேசினார். இப்பொழுது பிரிட்டனின் ராணுவ பலமும் பொருளாதார பலமும் முன்பிருந்ததைவிடப் பன்மடங்கு விருத்தியாயிருக்கிறது என்று கூறினார். இன்னும் வரப்போகும் நாட்களில் ஜெர்மன் விமானப் படையெடுப்பு மிகப் பலத்ததாக இருக்கலாம். பிரிட்டிஷ் மக்கள் அதனால் மனம் தளர்ச்சியடையக் கூடாது. பிரிட்டிஷ் விமான கப்பற்படை மிக்க பலத்துடன் எதிரியை எதிர்க்கத் தயாராக இருக்கிறது என்பதை அவர்கள் மறக்கக்கூடாது என்று எச்சரித்தார்.

சர்ச்சிலின் ரேடியோ பிரசங்கம் சில வட்டாரங்களில் யோசனையைக் கிளப்பியிருக்கிறது என்று ஹிந்து பத்திரிகையின் லண்டன் விசேஷ நிருபர் கூறுகிறார். "ஜெர்மனி பிரிட்டனுடன் கப்பற் சண்டை செய்யவேண்டும் என்று தீர்மானித்திருந்தால், அத்தீர்மானத்தை இப்பொழுதே ஹிட்லர் செயல் ரூபமாகக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. ஏனெனில் இனி வரப்போகும் பருவம் ஜெர்மனிக்கு அபாயத்தை விளைவிக்கக் கூடியதாக இருக்கும். அப்படி இப்பொழுதே ஜெர்மனி கப்பல் யுத்தத்தை ஆரம்பித்தாலும் பிரிட்டிஷ் கப்பற்படை எதிர்த்து யுத்தம் செய்யத் தயாராக இருக்கிறது. பிரிட்டிஷ் கப்பல் படையின் பலத்துக்கு அறிகுறியாக, ஒரு பெரிய கப்பற்படை கிழக்கு மத்திய பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அப்படி இல்லாமல் ஜெர்மனி தன் கப்பற்போரை இன்னும் ஒரு வருஷம் தள்ளிப் போடுமானால் அதற்குள் பிரிட்டன் தன் விமானப் படையைப் பெருக்கி ஜெர்மனியையும், ஜெர்மன் ஆதிக்கத்தில் சேர்ந்த நாடுகளையும் தீவிரமாகத் தாக்குவது நிச்சயம் என்று ஊகிக்கிறார். விமானப்படை மூலம் விமான எதிர்ப்பையும் சகித்துக் கொண்டு பிரிட்டனை ஆக்கிரமிக்க ஹிட்லர் எண்ணினால், அது அவரால் செய்ய முடியாத ஓர் பெருமுயற்சி என்பது தெரிந்த விஷயம் என்று கூறுகிறார்.

பிரிட்டிஷ்-ஜெர்மன் யுத்தம் ஐரோப்பா எங்கும் பரவி இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் சோவியத் சர்க்காரும், யுனைடெட் ஸ்டேட்ஸும் தங்கள் பலத்தை அதிகப்படுத்திக்கொண்டே வருகின்றன. யுத்தம் அட்லாண்டிக் பிரதேசத்தில் பரவாமல் இருக்க யுனைடெட் ஸ்டேட்ஸ் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது. ஆனால் யுத்தத்தை வலுக்கட்டாயமாகத் தாம் அழைக்க விரும்பவில்லை என்று பிரெஸிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறுகிறார்.

பால்கன் பிரதேசங்களுக்குள்ள தகராறு ஒரு வழியாக முடிவடைந்தது என்று இருக்கும்பொழுது, மறுபடியும் புதிய கிளர்ச்சிகளும் வைரமும் உண்டாயிருக்கின்றன. டிரான்ஸில் வேனியாவில் பிரவேசித்த ஹங்கேரியர்களை ருமேனிய சர்க்கார் கடுமையான அரசாட்சிக் குட்படுத்திய தாக ஹங்கேரி ருமேனியாமேல் குற்றம் சாட்டுகிறது. இந்தக் குற்றச் சாட்டு வலுத்து மறுபடியும் பால்கனில் தகராறு முளைக்குமோ வென்று ராஜ தந்திரிகள் சந்தேகப்படுகிறார்கள். இது எப்படி யாயினும் "ருமேனியா ஓர் சர்வாதிகார ராஜ்யமாய் விட்டது" என்று அத் தேசத்திய மன்னர் விடுத்த பிரகடனம் கூறுகிறது. அச்சுக்காரர்களின் ஆதரவை அண்டித்தான் ருமேனியா இருக்கிறது என்று அப் பிரகடனம் விளக்குகிறது.

இத்தாலியத் துருப்புகள் திடீரென்று எகிப்து எல்லையைக் கடந்து ஸோலம் என்ற இடத்தைக் கைப்பற்றின என்று கெய்ரோ செய்தி ஒன்று கூறுகிறது. இந்த ஆக்கிரமிப்பினால் எகிப்துக்கு ஒன்றும் நஷ்டம் ஏற்படவில்லை என்று தெரிகிறது.

இந்துதேச சரித்திரத்தில் ஓர் முக்கியஸ்தானம் வகிக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சி இந்த வாரத்தில் ஏற்பட்டிருக்கிறது. பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடிற்று. காந்திஜி கூட்டத்தில் பிரஸன்னமாயிருந்தார். பிரிட்டிஷ் சர்க்காருக்கு வழி காட்டியாயிருந்த பூனா தீர்மானத்தைப் பம்பாய் காங்கிரஸ் வாபஸ் வாங்கிக்கொண்டது. காந்திஜிக்குப் பூரண அதிகாரத்தையும் அளித்து அவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. காந்திஜியும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நடவடிக்கை நடத்தத் தீர்மானித்திருக்கிறார்.

காந்திஜி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் சுமார் இரண்டு மணி நேரம் பேசினார். "கடந்த ஐம்பது வருஷங்களாக நான் மகத்தான பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டதுண்டு. ஆனால் இப்பொழுது நீங்கள் என்னிடம் ஒப்படைத்திருக்கும் பொறுப்பு அவை எல்லாவற்றிலும் பெரியது" என்று கூறினார்; அஹிம்ஸா தத்துவத்தின் சக்தியை மறுபடியும் எடுத்து விளக்கிக் காட்டினார்; அஹிம்ஸையும் சத்தியமுமேதான் நம்முடைய சுதந்திரப் போருக்கு ஆயுதங்களாக இருக்க வேண்டும் என்று கூறினார். காந்திஜி சுதந்திரம் என்பதற்குப் பொருள் பிரஜா உரிமை என்றும் அவ்வித பிரஜா உரிமைக்குத்தான் பாடுபடவேண்டும் என்றும் கூறினார்.

"யுத்த எதிர்ப்புப் பிரசாரம் செய்யக் காங்கிரஸுக்கு உரிமை வேண்டும்" என்ற இறுதிக் கோரிக்கையுடன் வைஸ்ராயைக் காணக் காந்திஜி தீர்மானித்திருக்கிறார். இக் கோரிக்கைக்கு வைஸ்ராய் இணங்கினால் சட்டமறுப்பு இயக்கத்துக்கு வேறு இல்லை என்று கூறினார்.

சென்ற 16-ம் தேதி அ. இ. காங்கிரஸ் கமிட்டி கூடும் இடத்துக் கருகில் தேசியக் கொடியை ஏற்றி, தொண்டர் அணிவகுப்பைப் பார்வையிடுகையில், ராஷ்டிரபதி மௌலானா ஆஸாத், "இந்தியா சுதந்திரம் பெற எடுத்துக்கொள்ளும் முயற்சியில் பொது மக்களும் காங்கிரஸுடன் ஒத்துழைக்கவேண்டும்" என்றார். "நம் நாட்டில் ஒவ்வொரு வீட்டின்மேலும் ஒரு தேசியக்கொடி பறப்பதைப் பார்க்கவேண்டியகாலம் இன்னும் வரவில்லை. மனம் தளராதீர்கள். இக் கொடியின்கீழ்த் திரண்டு, இதன் கௌரவத்தைக் காப்பாற்றுங்கள்" என்று கூறினார்.

சென்ற 15-ம் தேதி பிரிட்டிஷ் சர்க்காரின் போக்கைக் கண்டிக்கத் தலைச்சேரியில் கூடிய காங்கிரஸ் கூட்டத்தைக் கலைக்கப் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அதனால் இருவர் மாண்டனர் என்றும் செய்தி கூறுகிறது.

ஹிட்லரின் படையெடுப்புத் திட்டம்

சமீபத்தில் ஐரோப்பாவிலிருந்து திரும்பி வந்த ராஜ தந்திரி ஒருவர் எழுதிய கட்டுரைகள் இரண்டு "நியூயார்க் ஹெரால்ட்டரிப்யூன்" பத்திரிகையில் இப்போது வெளிவந்திருக்கின்றன. இந்தக்கட்டுரைகளில் கீழ்க்கண்ட விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன: (1) பிரிட்டன் தயாராயில்லையென்று வெளிப்படையாய்த் தெரியும்படி மே மாத ஆரம்பத்திலே சேம்பர்லேன் பேசிய அந்தப் பேச்சுத்தான் ஹிட்லர் ஹாலந்தையும் பெல்ஜியத்தையும் தாக்கத் தீர்மானித்ததற்குக் காரணமாயிருந்தது. ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் இந்தத் தாக்குதலுக்காக எத்தனை நாளைக்கு முன்போ மிகவும் விவரமாகத் திட்டம் போட்டு வைத்திருந்தார்களாயினும், கோயரிங் அதை அடியோடு எதிர்த்ததாலும் வான் ப்ராச்சிட்ஷ், ஹெஸ், ஹிம்லர் இவர்கள் சந்தேகங் கொண்டிருந்தாலுமே அது தாமதப்பட்டது. (2) ரேனோ மந்திரி சபை வீழ்ச்சியடையும் தருணத்தில், லவாலும் ப்லாண்டினும் முஸ்ஸோலினிக்கு ரகசியமாகச் சில விஷயங்களைக் கூறி ஆசை காட்டினார்கள். அவர் போர் புரியாமலே ட்யூனிஸ், ப்ரெஞ்சு ஸோமாலிலாந்து, ஜிபூதி–அடிஸ் அபாபா ரெயில்வே இவைகளையும், சூயஸ் கால்வாய் நிருவாக சபையில் பிரதிநிதித்துவத்தையும், மால்டாவிலிருந்து ராணுவத்தை நீக்கிவிடுவது உட்படச் சில அனுகூலங்களையும் அவர் பெற்று விடலாமென்றும், இந்த அனுகூலங்களின் விஷயத்தில் பிரிட்டனை பிரெஞ்சுக்காரர் இணங்கச் செய்வார்களென்றும் அவர்கள் கூறினார்கள். (3) இத்தாலி யுத்தத்துக்கு ஆயத்தமாயில்லையென அறிந்திருந்ததால் யுத்தம் நீடிக்கும் பட்சத்தில் அதற்குப் பேராபத்தாய் முடியுமென்றெண்ணி முஸ்ஸோலினி தயங்கினார். ஆனால் கடைசியில் ஹிட்லரிடமிருந்து கோபாவேசத்தோடு ஒரு கட்டளை பிறந்தது. அதனோடு இத்தாலியின் அபிலாஷைகளையெல்லாம் தாராளமாகப் பூர்த்தி செய்து வைப்பதாக வாக்கும் கிடைத்தது. இதனால் முஸ்ஸோலினி தம் சந்தேகங்களையெல்லாம் விட்டொழித்துவிட்டார். (4)வலிய வந்ததையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு முஸ்ஸோலினி யுத்தத்தில் இறங்கியதைக் கேள்விப்பட்டபோது ரோமாபுரியில் பிரெஞ்சுத் தூதுவராயிருந்த ப்ராங்காய் பான்ஸெட் என்பவர், "சண்டையில்லாமலே எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுங்கூட அதை நிராகரித்துவிட்டு எப்படி முடியுமோ என்று சந்தேகமாயிருக்கும் ஒரு யுத்தத்தில் இறங்கித் தன் கோரிக்கைகளுக்காகப் போராட ஒரு நாடு தீர்மானித்ததே சரித்திரத்திலேயே இதற்குமுன் கண்டதில்லை"

இத்தாலியும் ஜெர்மனியும் சேர்ந்து பிரிட்டனைத் தாக்குவதற்கான முடிவான திட்டமொன்று ஜூன் 18உ மூனிக்கில் ஹிட்லருக்கும் முஸ்ஸோலினிக்கு மிடையே நடந்த ஆலோசனையின்போது போடப்பட்டதாக இந்தக் கட்டுரை ஆசிரியர் கூறுகிறார்.

விளம்பரம்

மன்னார்குடி டி. முன்சீப் கோர்ட்டு

1940 ௵ S. C. நெ. 198.

சீர்காழி தாலுக்கா மத்தனமுடையாளில் இருக்கும் ஷண்முக முதலியார் குமாரர் சிவப்பிரகாச முதலியார்.	வாதி.
மன்னார்குடி தாலுக்கா தென்கோவனூரிலிருக்கும் கோட்டூர் தியாகராஜ முதலியார் குமாரர் வெங்கடாசல முதலியார்	பிரதி வாதி

ஷெ நம்பரில் வாதிக்குப் பிரதிவாதி 16-1-37ல் ரூ. 150-0-0க்குப் புரோநோட்டு எழுதிக்கொடுக்கப்பட்டு அதற்காக பிரதிவாதி 16-4-1937ல் ரூ. 52-0-0 கொடுத்தவர் பாக்கிக்கொடாததால் ஷெயார்பேரில் வாதி தாவா செய்யப்பட்டுச் சம்மன்கள் நேரில் சார்வாகாததால் ஒட்டிச் சார்வுக்கும்; பேப்பர் பப்ளிக்கேஷனுக்கும் உத்திரவாகி 30-9-1940ல் ஹீரங்கி போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபணையிருந்தால் அன்று ம. டி. மு. கோர்ட்டில் தெரிவித்துக்கொள்ளவேண்டியது. அப்படிக்கில்லாதவரையில் அன்று பிரதிவாதியை ஆஜரில்லையென்று எக்ஸ்பார்ட்டி செய்யப்படுமென்பதை அறிவிக்கலானேன்.

(Sd.) S. ராமஸ்வாமி ஐயங்கார்,
பி. ஏ., பி. எல்.
வாதி வக்கீல், மன்னார்குடி.

உதிர்ந்த மணிகள்

இந்த (பிரிட்டிஷ்) சர்க்காரின் அசட்டுத் தனமான போக்கின் சின்னம் இந்தியா தான். கூடிய சீக்கிரத்தில் தான் இந்தியா விற்குச் சுதந்திரத்தை அளிக்கவேண்டும் என்று நாம் உறுதி கூறுகிறோம். ஆனால் அதைச் செயல் ரூபமாக மாற்றக் கொஞ் சம்கூடப் பிரயத்தனம் செய்யவில்லை.

—ஹெறால்ட் லாஸ்கி

* * *

உபாத்தியாயர்கள் குழந்தைகளின் உள் ளத்தில் தேசபக்தி வேரூன்றும்படி செய்யவேண்டும். இந்தியா தேசத்திலுள் ளவர்கள் எல்லோரும் ஒரே வகுப்பைச் சார்ந்தவர்கள் என்று அவர்கள் எண்ணு கிருக்கிற வரையில் அவர்களிடத்தில் தேச பக்தி இல்லை என்றே சொல்லிவிடலாம்.

—எஸ். ஸ்ரீனிவாஸ அய்யங்கார்

* * *

உடனே சர்வ-கட்சி முஸ்லிம் மகாநாடு ஒன்று கூடி ஜின்னாவின் ஆதிக்கத்தினின் றும் முஸ்லிம்களை விடுவிக்கும்படியான வழிகளைத் தேடவேண்டும்.

—மஹம்மத் அமின்கோஸா

* * *

பிரிட்டன் தன் பெருந்தன்மையான மனப்பான்மையால், இந்தியாவின்—காங் கிரஸின் சுதந்திரத்தையல்ல—சுதந்திரத் தை ஆமோதிப்பார்களானால், இந்தியாவி லுள்ள மற்றக் கட்சிக்காரர்களும் நம் முடன் கலந்து கொள்ளுவார்களானல், இந்த யுத்த தேசங்களுக்கிடையில் சம ரஸத்தை நிலைநாட்டுபவர்கள் வகிக்கும் கௌரவமான பதவியை நாம் வகிக்கலாம்.

—காந்திஜி

* * *

காங்கிரஸ் இந்த நேரத்தில் பிரிட்டனை நையாண்டி செய்கிறது என்று சொல்வது தவறு. பார்க்கப்போனால் இந்தியாவின் தற்கால நிலைமையை அறியாமல் இந்தியத் தற்காப்புச் சட்டத்தின் பேரைச் சொல் லிக் கொண்டு, சர்க்கார் அடக்குமுறை யைக் கையாண்டு வருவது, காங்கிரஸைக் கால்பிருண்டிச் சண்டைக்கிழுக்கச் சர்க்கார் விரும்புகிறது என்று எண்ணக்கூடியதாக இருக்கிறது. —ப்ரோபுல்ல சந்திர கோஷ்

* * *

தேசபக்தியும், தியாகத் தன்மையும் பிரிட்டிஷாருக்கு மாத்திரம் சொந்தமான வையல்ல. தன் தேசியத்தை உஜ்ஜீவிக்க இந்தியாவும் மிகப் பாடுபடும் யோக்யதை யுள்ளது. (பிரிட்டன் மாத்திரமல்ல) தங் கள் லக்ஷியத்தைப் பெற எவ்வளவு பல மான அடக்குமுறையையும் எதிர்த்து உயிரை விடும் தீரத்தையுடைய இந்தியர் களை எந்த விதமான சக்திவாய்ந்த அடக்கு முறையும் ஒன்றும் செய்ய இயலாது என் பதை இந்தியர்கள் தயக்கமின்றித் தைரிய மாகக் கூறுவார்கள். —கே. எம். முன்ஷி

ஈரோடு டி. மு. கோர்ட்டு

1938 of S. C. No. 965
1940 of E. P. R. No. 369
1940 of E. A. No. 1028

ஈரோடு தாலூக்கா கொளத்துப் பாளை யம் கிராமம் வேலாங்காட்டூர் முத்துக் கவுண்டன் மகன் கருப்பண கவுண்டன் —வாதி

ஷையூர் ராமண கவுண்டன் மகன் முத் துக் கவுண்டன்—பிரதிவாதி.

வாதியின் டிக்கிரி கடனுக்கு பிரதிவாதி யின் ஸ்தாவர சொத்துக்களைப் பொறுத்து ஏல கிஸ்தியாரின் ஷரத்துக்களை நிர்ண யிப்பதற்காக 26-9-1940 தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது.

(Sd) U. S. சுப்பிரமணிய ஐயர்,
வாதி வக்கீல்.

ஈரோடு
9—9—40

குவலயானந்த ஸுபாஷிதம்

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள் எம். ஏ., பி. எல். அண்ணாமலைநகர்]

கர்ணாருந்துத மந்தரேண ரணிதம்
காஹஸ்வ காக ? ஸ்வயம்
மாகந்தம் மகரந்தசாலினமிஹ
த்வர்ம் மன்மஹே கோகிலம் ।
தன்யானி ஸ்தலவைபவேன கதிசித்
வஸ்தூனி கஸ்தூரிகாம்
நேபாள க்ஷிதிபால பாலபதிதே
பங்கே ந சங்கேத க: ॥

உலகத்தில் யோக்கியதைக்குத் தகுந்த ஸ்தானம் கிடைப்பதரிது. யோக்யதை பொருத்தமா யுள்ளவர் தகுந்த ஸ்தானம் பெறாமல் வாழ்நாட்களை வீணே கழிப்பதும், அல்ப யோக்கியதை யுள்ளவர்கள் பெரிய ஸ்தானங்களைப் பற்றிக்கொண்டு அட்டஹாஸம் செய்வதும் அன்றும் இன்றும் மானிட உலகத்தில் புதுமையல்ல. பரிபூர்ண யோக்கியதையுடையவர்கட்கு ஒருவித அடக்கம் இயல்பா யுள்ளது. அவ் வடக்கத்தினால் மந்தபுத்தியுடைய பொது ஜனங்களுக்கு அவர்களின் யோக்கியதை பிரகாசிப்பதில்லை. தாமாகவே பிறர் பெருமையைக் கூர்மையான அறிவினால் நிர்ணயிக்கும் தன்மை யுடையவர் சிலரே. அவர்களுக்கும் அஸூயை என்ற மூட்டம் மேலிட்டு வாயைக் கட்டிவிடும். ஆகையால்தான் பர்த்ருஹரி சொன்னார் :

போத்தாரோ மத்ஸரக்ரஸ்தா :
ப்ரபவ : ஸ்மயதூஷிதா : ।
அபோதோ பஹதோ லோகோ
ஜீர்ணமங்கே ஸுபாஷிதம் ॥

என்று. தெரிந்தவர் அஸூயைப் பட்டுக் குணத்தைச் சுவாசிக்காதிருந்து விடுகின்றனர். பிரபுக்களுக்கு அகம்பாவத்தினால் ஒன்றுமே புலப்படுவதில்லை. கேவலம் மதாந்தர்களாய் நல்லது, கெட்டது என்ற பகுத்தறிவு கெட்ட மூடர்களாயிருக்கிறார்கள். பாமரஜனங்களோ ஸ்வயமஞ்ஞானிகளாதலால், பிறர் சொல்லைப் பின்பற்றும் பேடிகள். இப்படி யிருக்குமிடத்தில், மஹான்களின் நன்மொழிகள் அவர்களின் சரீரத்திலே ஜீர்ணமாகவேண்டியிருக்கிறது. கேட்பாரில்லை. பெரியோர் இயற்கைக் கவித்வம் உள்ளவர், இவ்வாறு புறக்கணிக்கப்பட்டு, உள்ளம் வெந்து, மன மொடிந்து, தங்கள் ஆத்ம வெள்ளப் பெருக்கிற்கு வினியோகமில்லாமல் அதைத் தாங்களே பருகிப் பரிதவித்துக் காலகதியை அடைந்துகொண் டிருக்கும்போது, அற்பர்கள், தற் புகழ்ச்சியாளர்கள், படாடோபக்காரர்கள், சுய நலத்தைக் கருதி மேன்மேலும் ஆக்கிரமிக்கும் ஆர்வமுடையவர், அப்பெரியோர்களுக்கு அர்ஹமான ஸ்தலங்களைக் கவிந்துகொண்டு அட்டஹாஸம் செய்யத் தொடங்குகிறார்கள். இவ்விதம் கடவுள் திருவுள்ளம் நடந்து வருவதை ஒரு ஏழை விவேகி எப்படித் தடுத்துச் சீர்திருத்த முடியும்? கோகிலங்கள் வெட்கித் தலை மறைந்து கிடப்பதும் காகங்கள் குதூகலத்துடன் கும்மாளம் அடிப்பதும் உலக வாழ்க்கையில் ஸகஜமாயிருப்பது தெய்வ ஸம்மதம் என்பதற்கையமில்லை; ஆகையால் கவி வருத்தப்படவில்லை. ஆத்திரப்படவுமில்லை. தீராத துர்க்கதியைத் தவிர்க்கத் திறமையில்லாதவன் தன் தீவிர வேகத்தை யடக்கிக்கொண்டு சாந்த மனத்துடன் மனோதிடத்துடன் காலப் போக்கிற்குத் தக்கவாறு வளைந்து நுழைந்து கொடுத்து ஒருவாறு தன் ஜீவனத்தை நடத்துவதே குணமாகும்.

இவ்வித அமைதியை அடைந்த கவி காகத்தைக் கோகிலத்திற்கு யோக்கியமான மாங்கிளையில் பார்க்கிறான். காகம் அக்கிளை தன் ஸிம்மாதனம் என்று மதிப்பதுபோல் வெகு ஒய்யாரமாகச் சுற்றுமுற்றும் பார்க்கிறது. வஸந்த காலத்தில் புஷ்பித்திருக்கும் மரம் செடி கொடிகள் தமக்குக் கைங்கரியம் செய்யவந்தவை எனக்கருதுகிறது. காலம் காகத்திற்கு அனுகூலமாயிருக்கிறது. மாந்தளிரைத் தின்று மதுரமாய்க் கூவும் குயிலையோ

காணமுடியவில்லை. கவிசெய்வதொன்றுமில்லாததால் காகத்தைக் கோகிலத்தின் ஸ்தானத்தில் வெளிப்படையாக ஒப்புக்கொண்டு தன் வெறுப்பைச் சாதுர்யமான பரிஹாஸ வார்த்தையினால் த்வனிக்கச் செய்கிறான். "காக்கையே! நீயோ குயிலின் ஸ்தானத்தில் வீற்றிருக்கிறாய். உன்னைக் காக்கை என்று யார் அறிந்துகொண்டு இகழப் போகிறார்கள். உலகத்தவர் ஊன்றிக் கவனித்தறியும் தன்மையுள்ளவர் அல்ல. என்னைப் போன்ற சிலரே அவ்விதம் நுட்பமாய்ப் பரிசிலனை செய்பவர். ஆனால் எங்கள் ஆராய்ச்சி எங்களுடன் மடியும். காது கொடுத்துக் கேட்பவர் கிடையாது. ஸ்தூலமாகப் பார்த்துப் பற்பல அஸம்பத்தக் கொள்கைகளைப் பின்பற்றிக் கண் மூடித்தனமாய் இருப்பவர் உலகத்தவர். பெரும்பாலும், அவர்கள் கறுமையான ஓர் பக்ஷி மாங்கிளையில் இருக்கிறது என்றால் அது கோகிலமே என்று ஸாதிக்க யோசிக்கமாட்டார்கள். கஸ்தூரி மான்கள் மிகுதியான ஹிமய மலைத் தாழ்வரையில் உள்ள நேபாள தேசத்தரசன் நெற்றியில் சேறு தெளித்திருந்தாலும் அதைக் கஸ்தூரிப் பொட்டென்றே நினைக்க ஹேதுவாகும். அவ்விதம் மாங்கிளையில் வசிப்பது கோகிலமே என்று சாமான்ய ஜனங்கள் நினைப்பது ஸகஜம். நல்லது, ஆனால், காகமே, நீ 'அப்பா குதிருக்குள் இல்லை' என்பதுபோல் உன் விகார ஸ்வரத்தை வெளிப்படுத்தி விடுகிறாயே, இந்த அசட்டுத்தனம் மட்டும் இல்லாமலிருக்கக்கூடாதா? நீ மாங்கிளையில் உட்காருவதையாவது குயில் என்று நினைத்துக் கொள்வதையாவது யார் ஆக்ஷேபிக்கிறார்கள்? நான் ஆக்ஷேபிக்காமலிருப்பது மட்டுமல்ல, உன்னைக் குயில் என்று சொல்லி விடவும் தயாராயிருக்கிறேன். ஜனங்களும் பூர்ணமாக உன்னைக் குயிலென்றே நம்பி விடுகிறார்கள். ஆனால் உன் மிதமிஞ்சிய உற்சாகம் உனது புகழைப் பாழாக்குகிறது. நீ ஏன் இவ்விதம் 'வராட்' 'வராட்' என்று கத்தவேண்டும்? காதைத் துளைக்கிறதே உனது கடூரமான குரல். ஏன் இவ்விதம் 'நான்தான் காக்கை' என்று தண்டோரா போட்டுக் கொள்கிறாய்? கொஞ்சம் அசடு வழியாமல் மதிப்பாயிருந்தால் இன்னும் எவ்வளவோ காலம் ஜனங்களை மோஹப் படுத்திக் கௌரவத்தைப் பெறலாமே. ஏன் இப்படி உன்னை நீயே கெடுத்துக் கொள்ளுகிறாய்?" இவ்விதம் கவி ஒரு ஸ்தானத்திற்கு யோக்யதை யில்லாமல் பலாத்காரத்தினாலோ அல்லது சிபார்சு பலத்தாலோ அதைப் பற்றிக்கொண்டு பிறகு தன் மூடத்தனத்தால் "இளிச்ச வாய்ப்" பட்டம் பெறுகிறவர்களைப் பார்த்து இந்தச் சுலோகத்தினால் பரிஹஸிக்கிறான்.

இக் கவி பேசிய காலத்தைவிட நாமிருக்கும் காலம் ரொம்ப முன்னேற்றமடைந்திருக்கிறது. கவி காலத்தில் கோகில ஸ்வரத்தைக் கேட்டு ஆனந்திப்பவர் இருந்தபடியால் காகத்தைக் குரலால் தெரிந்து கொண்டு வெறுக்கக்கூடியவர் இருந்தார்கள். இப்பொழுது கோகில ஸ்வரத்தின் வாஸனையே அற்றுப்போன ஜனங்கள் மிகுதியாகி விட்டபடியால் காகம் "கரா, கரா" வென்று கத்தினாலும்—ஆஹா! அதோ பார், குயில் கூவுகிறது என்று மனம் மலர்வது அஸம்பாவிதமல்ல வென்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகள்
அருளிய

ப்ரச்நோத்ர ரத்ந மாலிகை

[மனனத்தின் பொருட்டுத் தமிழ்ப் பாடல்களாக
வரகவி திரு அ. சுப்ரமண்ய பாரதியார் இயற்றியது.]

(9) சீவிதம்என் ? தீங்கின்மை ; செய்யவறி வின்மையெது ?
மேவியதேர் விற்பழக்கம் மேவாமை—தாவில்
விழிப்புடையோன் யாவன் ? விவேகி ; துயில்யாது ?
பழிப்புறுமூ டத்தனமே பார்.

சீவிதம் - உயிர்வாழ்தல்; தேர்வு - தேர்ச்சி ; பழக்கம் - அப்யாஸம்; தாவில் - கெடுதலில்லாத; விழிப்பு - ஜாக்ரம்.

(கருத்து) பிழையின்றி வாழ்வதே உயிர் வாழ்க்கை; அடைந்த தேர்ச்சியில் அப்யாஸம் கொள்ளாமையே அறிவின்மை; விவேகியே விழிப்புடையவன் ; ஜீவர்களின் மௌட்டியமே நித்திரை.

(10) மரையிலைநீர் போலுநிலை மாய்வதெவை? செல்வம் ;
உரையிளமை ; ஆயுள் ; உடுக்கள்—அரையன்றன்
தண்கிரணம் போற்பிறர்க்குத் தக்கஇதம் சொல்வோர்யார்?
கண்களிக்கும் நல்லோரே காண்.

மரை - தாமரை ; உடுக்கள் அரையன் - நக்ஷத்திரங்களுக்கு அதிபதியான சந்திரன்.

(கருத்து) செல்வம், இளமை, ஆயுள் இவை தாமரையிலையின் நீர்போல் நிலையாவாம் ; குளிர்ந்த சந்திரகிரணம் போன்ற இதத்தைச் சொல்வோர் நல்லோரே.

(11) நரகெது? பி றர்க்கடிமை ; நண்ணுசுகம் யாது ?
சருவசங்க முந்துறத்தல் தானே ; விரியுலகிற்
கொள்ளுவதென் ? சீவர்க்குக் கூறிதம் ;சீ வர்க்கினிதாய்
உள்ளதென்பி ராணனென ஓது.

நாகு - நரகம்.

(கருத்து) பிறர்க்கடிமையா யிருத்தலே நரகம் ; ஸர்வஸங்கபரித்யாகமே சுகம் ; விடாது பற்றத்தக்கது ஜீவர்க்கிதம் போதித்தல்: ஜீவர்க்கினியதாயுள்ளது பிராணனும்.

(12) காசினியில் தானமெது ? கைம்மா றுகவாமை ;
நேசனெவன தீங்கினின்று நீக்குவோன்;—தேசுளதென் ?
சீலமே ; வாக்கிற்குச் சேரழகு யாதுகொல் ?
தாலமேத் தம்வாய்மை தான்.

காசினி - பூமி ; கைம்மாறு - பிரதிபலன் ; உகவாமை - விரும்பாமை ; தேசு - அழகு ; தாலம் - பூமி.

(கருத்து) பிரதிபலனை இச்சியாமற் செய்வதே தானம் ; பாவத்தினின்றும் விடுவிப்பவனே ஸ்நேகன் ; சீலமே அழகுடையது ; ஸத்யமே வாக்கிற்கு அழகு.

(தொடரும்)

குற்றமில்லாத
தோற்றத்திற்கு
மைசூர் சந்தண சோப்
பைப்போல் நல்லது
வேறொன்றுமில்லை

அதை உபயோகித்தால் சருமம்
வெண்மையாயும் மிருதுவாயும்
ஆகிறது.

MYSORE
Sandal
SOAP
GOVT. SOAP FACTORY, BANGALORE.

மைசூர் சந்தண சோப்

பரசுராம சித்த ஔஷதாச்ரமம் திருவண்ணாமலை (N. A. Dt.)

மதராஸ் பிராஞ்சு: 59-A, லாய்ட்ஸ் ரோட், ராயப்பேட்டை.

நீடித்த வியாதிகளை, முப்பு குருவால் செய்த ஔஷதங்களால் நிவர்த்தி செய்யப்படும். டியூபர்குலோஸிஸ் என்ற க்ஷய ரோகத்திற்கும் நீரழிவு ரோகத்திற்கும் சர்ம தோஷங்களுக்கும் (குஷ்ட முள்பட) ஔஷதங்கள் இருக்கின்றன.

முப்பு குரு சேர்ந்த "சித்த எண்ணெய்"

இது சர்வரோக நிவாரணி, பரம சஞ்சீவி. ஔஷத சாலையின் பிரதான வைத்தியர் பிரதி மாதமும் மதறாஸில் 1௳ முதல் 10௳ வரையில் இருப்பார்.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்: ஸாரதா ஸ்டோர்ஸ், கரைக்குடி.
ஸ்டாக்கிஸ்ட்ஸ்: அப்பா அண்டு கம்பெனி, மதராஸ்.
மீனாட்க்ஷி ஸ்டோர்ஸ், தேவக்கோட்டை. T. N. நாகலிங்கம் பிள்ளை, மதுரை.
T. N. சொக்கலிங்கம் பிள்ளை, அண்டு சன்ஸ், மதரை

"தினமணி" பத்திரிகை ஆசிரியர்
ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை 6-5-40ல் எழுதுகிறார்.

டாக்டர் எஸ். பரசுராம ஐயர் அவர்களின் வியாதியைப்பற்றியும், அவர்களுடைய பிரமுகர்களாலும் டாக்டர்களாலும் கொடுக்கப்பட்ட பல நற்சாட்சிப் பத்திரங்களையும் பரிசீலனை செய்த பிறகு எனக்கும் அவர்களிடம் எனது ஆரோக்கியத்திற்காக மருந்து சாப்பிடலாமென்று தோன்றியது. நான் அவர்களிடம் ஒருவாரம் மருந்து சாப்பிட்டபின் எனக்கு ரொம்பவும் ஆச்சரியப்படத்தக்க குணம் ஏற்பட்டு ஆரோக்கியத்தையும் கொடுத்தது.

இதனால் இதற்குமுன், இங்கிலீஷ் டாக்டரிடம் மருந்து வாங்கி சாப்பிட்டபோதிலும் குணம் ஏற்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். அநேகம் பேர்கள் தகுந்த நாட்டு வைத்தியர்கள் அகப்படாததால் வெளிநாட்டு மருந்துகளை உபயோகிக்கிறார்கள்."

இதோ, தகுந்தவராயும், சாமர்த்தியம் வாய்ந்தவருமான டாக்டர் இருக்கிறார் என்பதைத் தெரிவிக்கிறேன். நமது புராதன வைத்யமுறையை ஆராய்ச்சி செய்தவர்களில் ஒருவர் என்று நம்புகிறேன். அவருடைய மருந்துகள் அபூர்வ குணத்தைக் கொடுக்கக்கூடியவைகளாயிருக்கின்றன.

(ஒப்பம்.) டி. எஸ். சொக்கலிங்கம்,

குடிசையின் குரல்!

[பண்டித. ஏ. எஸ். ரேங்கனாதாச்சாரி, ஆதனூர்]

" ஆச்சரியப் படுவதற்கு என்ன இருக்கிறது! குடிசையின் குரல்தான். சற்றே ஆத்ம சாந்தியுடன் நிதானித்துப் பாருங்கள். இப்பொழுது காதில் விழுகிறதா...?"

இந்தியாவில் சுமார் ஏழரை லக்ஷம் கிராமங்கள் இருக்கின்றன. கிராமம் என்று நான் எதைக் குறிப்பிடுகிறேன் தெரியுமா? சுருங்கக் கூறின், எவ்விடத்தில் ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குச் செல்ல ரோட்டு வசதி யில்லையோ, எங்கே நோய் வாய்ப்பட்டிருக்கும் மக்களைக் காக்க வைத்தியசாலை தபால் வசதியில்லையோ, ரயில் முதலிய போக்குவரவு வசதியில்லையோ அதைத்தான் கிராமம் என்று குறிப்பிடுகிறேன்.

ஆனால், இந்த சாதனங்களில் சில கிராமங்களுக்குத் தேவையில்லை. ஏன்? இயற்கையன்னையின் களங்கமற்ற அருள் கிராமத்திடையே தேங்கிக் கிடக்கிறது. இனிய குடிதண்ணீர், புஷ்பங்களின் வாஸனையுடன் வீசும் பரிசுத்தமான காற்று, சூரியனின் பிரகாசமான அருள் நிறைந்த ஒளி, இவையாவு மிருக்கும் போது, கிராம மக்களுக்குச் செயற்கைச் சாதனங்கள் ஒரு சிலவற்றைத் தவிர மற்றவை எதற்கு?

ஒரு மரம் வெயிலிலும், மழையிலும் காய்ந்து, நனைந்துகொண்டு தன் கீழுள்ளவர்களை நனையாமலும், காயாமலும் காக்கிறதல்லவா? இதேபோலத்தான் கிராமங்களின் செய்கையும். நெற்றி வேர்வை நிலத்தில்விழ நாள்முழுவதும் உழைத்துத் தழைக்கச் செய்த தானியங்களை அறுவடை செய்து, பாழும் வாயிதாவிற்குப் பணமில்லாது நகரத்தில் கொண்டு போய் விற்பனை செய்து வாயிதாச் செலுத்தி நாணயத்துடன், ஒரு பிடி தானியமு மில்லாது வீடு திரும்புகிறான். கிராம மக்களினாலளிக்கப்படும் வாய்தாப் பணங்களைக்கொண்டு கவர்ன்மெண்டாரின் உல்லாசப் பிரயாணங்களும், ஆடம்பர அநாவசியச் செலவுகளும் நடைபெறுகின்றன.

ஆனால், கிராம மக்கள் உண்ண உணவும், தங்க இடமும், உடுக்க உடையு மில்லாது மேற் கூரைகூட இல்லாத இடிந்த வீட்டில் தன் தலை யெழுத்தை நினைந்து வருந்துகிறார்கள். குடிசையின் மற்றோர் புறத்தில் பசிப்பிணியால் வருந்தி ஓலமிடும் குழந்தையின் கூட்டம்; குழந்தைகளின் கஷ்டத்தைக் கண்டு தளர்ந்த தாயின் அழுகை மற்றோர் புறம்; இவை யிரண்டின் தோற்றமும் குடிசை எஜமானனின் இடிந்த மனக் கோட்டையைத் தகர்த்தெறிகின்றது. இக் கூக்குரல்கள் யாவும் ஒன்று சேர்ந்து திறந்து கிடக்கும் கூரையின் மேல் பாகமாக வெளிக் கிளம்பிக் காற்றில் கலக்கின்றன. அப்பாடா! எத்தனை வஞ்சனை இக் காற்றிற்கு! நகர மக்களிடையே இக் காற்று இக்கூக்குரலை ஒலி பரப்புகிறதா? இல்லவே யில்லை. அதற்கு மாறாக, சங்கீதங்களையும், பேச்சுக்களையும் ஒலி பரப்புகிறது.

இந்தக் கூக்குரலை நிவர்த்தித்து, ஏழைகளின் பசிப்பிணியைப் போக்க மார்க்கமில்லையா? ஏன் இல்லை?

(429-ம் பக்கம் பார்க்க)

யூனிபார்ம் டின்னர்

[ஜானகி, தஞ்சாவூர்]

"மணி எழு அடித்து விட்டது. எழரை மணிக்கு நீலா வீட்டு டின்னருக்குப் போக வேண்டும். எஜமான் இன்னும் ஆபீஸிலிருந்து வரவில்லையே?" என்று வேலைக்காரி வேலம்மாளிடம் எஜமானி ஹேமாவதி சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது கார் ஹாரன் சப்தம் கேட்டது. டிரைவர் உள்ளே வந்து, "அம்மா, எஜமான் வீட்டுக்குவர நேரமாகுமாம். காரை அனுப்பி விட்டாங்க. உங்களை டின்னருக்குப் போகும்படி சொன்னாங்க"

ஹேமா, "டிரைவர், கொஞ்சம் இரு, இதோ வருகிறேன்" என்று சொல்லிவிட்டு எழுந்துபோய்த் தலைவாரிக்கொண்டு டிரஸ் செய்துகொண்டு தான் உடுத்திக் கொண்ட லுங்கிப் பாட்டர்ன் புடவைக் கலரிலேயே லுங்கிப் பாட்டர்னில் காரின் ஸீட்டுக்கும் பக்கங்களுக்கும் போடும்படி உறைகளை டிரைவரிடம் கொடுத்தாள்.

கார் உறைகளெல்லாம் போட்டு ரெடியானவுடன், ஹேமா டிரைவரை வீட்டுக்குப் போகும்படி சொல்லிவிட்டுத் தானே காரை டிரைவ் செய்துகொண்டு போனாள். போகும் வழியில் அவள் ஸ்நேகிதை ஸீதா ரிக்ஷாவைக் கூப்பிடுவதைப் பார்த்து அவ் வீட்டு வாசலில் காரை நிறுத்திக்கொண்டு "ஸீதா, நீ நீலா வீட்டு டின்னருக்கு வருகிறாயா?" என்றாள்.

ஸீதா:—நான் அங்குப் போகத்தான் ரிக்ஷா கூப்பிட்டேன்.

ஹேமா "ரிக்ஷா வேண்டாம். காரில் ஏறிக் கொள்ளு" என்று சொல்லி அவள் ஏறின உடன் பேசிக்கொண்டே ஹேமா காரை ஓட்டினாள்.

ஸீதா:—யூனிபார்ம் டின்னர் என்று கடிதத்தில் போட்டிருக்கிறார்களே அதன் அர்த்தம் என்ன?

ஹேமா:—கொஞ்ச நாட்களாகவே நீலா, நிலாச் சாப்பாடு செய்ய ஆசையாக இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருந்தாள். அவள் பெண் மனோரமா நாளைக்கு நாகப்பூர் போகிறாளாம். அதற்காக இன்று சாப்பாடு செய்கிறாள்.

ஸீதா:—அவர்கள் வீட்டில் எதற்காகச் சாப்பாடு செய்கிறார்கள் என்று நான் கேட்கவில்லை. யூனிபார்ம் டின்னர் என்றால் என்ன? ஒருக்கால் நம்ம கிளப்பில் நாம் எல்லோருமே யூனிபார்மாக டிரஸ் பண்ணிக் கொள்ளுகிறோமே. நம் எல்லாரையும் கூப்பிடுவதற்காக டின்னருக்கே யூனிபாரம் என்று பெயர் கொடுத்திருப்பார்களோ?

ஹேமா "எனக்கு அப்படித்தோணவில்லை. வேறு ஏதாவது காரணம் இருக்கும்" என்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது கார் நீலா பங்களாவின் ஸமீபம் வந்துவிட்டது. அவ்விடம் கார்களும் வண்டிகளும் ரிக்ஷாக்களும் ஸைகில்களுமாக வந்துகொண்டே இருந்தன. ஹேமாவதி காரின் ஸீட்டுக்கு உறை போட்டிருப்பது போல் இன்னும் சிலரும் அவர்கள் உடைகள் மாதிரியே துணியில் காருக்கு உறை போட்டு இருந்தார்கள். அவ்வித உறை போட்டிருக்கும் காரையும் அதிலிருந்து இறங்குகிறவர்களையும் பார்த்துச் சிலர் "மனிதர்கள் தாம் நெற்றிப்பொட்டு புஷ்பத்திலிருந்து கால் பூட்ஸ் வரையில் ஒரே நிறமானதாக அலங்காரம் செய்து கொள்கிறார்களே என்று 1940-ம் வருஷத்து மாடலில் காருக்கும் அதே அலங்காரம் ஏற்பட்டு விட்டதுபோல் இருக்கிறது! இதைவிட அதிசயமாக இன்று இவர்கள் வீட்டு டின்னருக்குப் பேர் கொடுத்திருக்கிறார்கள்" என்று பேசிக்கொண்டார்கள்.

நீலா வீட்டுக் காம்பவுண்டு கேட்டில் பெரிய வாழை மரம் இரு புறமும் கட்டியிருந்தது. எலக்டிரிக் விளக்கு பிரகாசித்துக்கொண்டு இருந்தது. ஹேமா காரைக் காம்பவுண்டுக்குள் ஓட்டிப் போய் நிறுத்தி விட்டு இருவரும் இறங்கிப் பங்களாவின்

தாழ்வாரத்துக்குச் சென்றார்கள். தாழ்வாரத்தில் நின்று கொண்டிருந்த சேவகன் பக்கத்திலிருந்த மாடிப் படியின் வழியாக எல்லாரையும் மேல் மாடிக்குப் போகும்படி சொல்லிக் கொண்டிருந்தான். எல்லோரும் மேல் மாடிக்குச் சென்றார்கள். மேல் மாடி திறந்த இடமானதாலும் உயரமான கட்டிடமானதாலும் நிலாவின் வெளிச்சம் அதிக பிரகாசமாக இருந்தது.

சுமார் எழுபது, எழுபத்தைந்து புஷ்பத் தொட்டிகளில் வாழைக் கன்றுகளை வைத்து மாடிக் கைப்பிடிச் சுவரின் நான்கு புறங்களிலும் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. அவ்வளவு வாழைக் கன்றுகளிலும் கலர் 'பல்புகள்' எரிந்து கொண்டிருந்தன. ஊதுவத்தி வாசனை மிகவும் ரம்யமாக இருந்தது.

அவ்விடம் பொறுக்கி எடுத்ததுபோல் முப்பது, முப்பத்தைந்து பெண்மணிகள் வந்திருந்தனர். அவர்கள் எல்லாருமே, புடவை என்ன கலரோ அதே நிற ஜாகிட்டு, நகை, புஷ்பம், குங்குமம், கர்சிப் எல்லாம் ஒரே நிறமாக அணிந்து கொண்டிருந்தார்கள்.

நீலாவும் மனோரமாவும் இலைப் பச்சை கலரில் புடவை ஜாகிட்டும், இளமயில் பச்சை பெயிண்டு நகைகளும். பச்சைக் கல்லினால் செய்த நகைகளும் அணிந்திருந்தார்கள்.

முப்பத்தைந்து பெரிய வாழை இலை நுனி இலைகளாகப் போட்டு, வாழை இலையினால் செய்த தொன்னைகளை ஒவ்வொரு இலைக்கும் இரண்டு தொன்னைகள் வீதம் இலையின் நுனியில் வைத்திருந்தார்கள். பச்சை நிறமான கிளாஸ் டம்ப்ளர்களில் தீர்த்தம் இலைகளின் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்தது. எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமான கலர்களில் நகை உடை அணிந்திருந்ததும் நிலா வெளிச்சத்தோடு கலர் பல்புகளின் வெளிச்சமும், குளிர்ந்த காற்றோடு ஊதுவத்தி வாஸனையும் வீசுவதோடு அங்கு வந்திருப்பவர்களின் ஸெண்டு ஸ்னோ வாஸனையும் சேர்ந்து வீசியது எல்லோருக்கும் ஆனந்தமாக இருந்தது. எல்லாரிடமும் சமையலின் விவரங்கள் அச்சிட்ட பேப்பரைக் கொடுத்து விட்டுப் பரிமாற ஆரம்பித்தார்கள்.

பேப்பரில் எழுதியிருந்த சமையல் விவரம்

1. வாழைக்காய்ப் பச்சடி.
2. வாழைக்காய் வதக்கல.
3. வாழைக்காய்ப் பொடிமாஸ்.
4. வாழைப் பூ கறி.
5. வாழைக்கச்சல் கூட்டு.
6. வாழைக்காய் கோளா.
7. வாழைக்காய் வறுவல்.
8. வாழைக்காய் பஜ்ஜி.
9. வாழைப் பூ கட்லேட்.
10. வாழைக்காய்ப் பொடி.
11. வாழைப்பழ குல்கந்து (பஞ்சாமிருதம்)
12. நேந்தரங்காயைச் சேமியா மாதிரி துருவி நெய்யில் பொரித்த பாயஸம்.
13. வாழைத்தண்டு மோர்க் குழம்பு.
14. வாழைப்பூ பொரித்த குழம்பு.
15. வாழைக்காய் சாம்பார்.
16. மலைப்பழம், தேன்கதலி, பச்சைப் பழம், செவ்வாழை.



ரஸம், சாதம், ஊறுகாய் இவைகளில் தான் வாழை சம்பந்தம் இல்லை.

பரிமாறி முடிந்ததும் அவ்விடம் வந்த எல்லோருமே "நீலா, இது என்ன? புதிய விதமாக நீ பேர்கொடுத்ததற்குச் சரியான தாகச் செய்திருக்கிறாயே!" என்று கேட்டார்கள்.

"நாம் விருந்துகளுக்கு எவ்வளவோ காலமாக எல்லாவிதமான கறிகாய்களையும் வாங்கி ஒரே வேளையில் சமையல் செய்வது, வழக்கமாக இருக்கிறது. நாம் எல்லோரும் யூனிபார்மாக டிரஸ் அலங்காரம் செய்து கொள்வது போல், ஒரே காயில் எவ்வளவு விதம் செய்ய முடிகிறதோ அதை ஒரே வேளையில் செய்வதால் யூனிபார்மாக இருக்கும். அப்படிச் செய்யவேண்டும் என்று மனோரமா ஆசைப்பட்டாள். அவள் எஜமானரோடு நாளைக்கு நாகப்பூர் போவதால் இன்று இந்த டின்னரைச் செய்தேன். ஒரே விதமான சாமானாக இருக்க வேண்டு மென்றுதான் புஷ்பத் தொட்டிக்கு பதில் வாழைக் கன்றுகளையே வைத்தோம்" என்று நீலா பதிலுரைத்தாள்.

"இன்று நீங்களெல்லாரும் யூனிபார்ம் டின்னருக்குச் சரியாக யூனிபார்ம் டிரஸ் செய்துகொண்டு வந்தது எனக்கு ரொம்பவும் ஸந்தோஷம்" என்றாள் மனோரமா.

அவ்விடம் வந்திருந்த எல்லோருமே இதுவும் ஒரு புதிய மாதிரியாகத்தான் இருக்கிறது என்றார்கள். சிலர் எந்தெந்தக் காய்களில் எவ்வளவு விதம் செய்யமுடியும் என்று அப்பொழுதே பேச ஆரம்பித்தார்கள். ஒருத்தி, "நாளைக்கு எங்கள் வீட்டில் சம்மந்திமார் வருகிறார்கள். பூசனிக்காயிலேயே எவ்வளவு விதம் செய்யமுடியுமோ அதைச் செய்து பூசனிக்காய் குல்கந்தும் செய்துவிடப் போகிறேன்" என்றாள். டின்னருக்குவந்த விருந்தாளிகள் அவரவர்களுக்குத் தோன்றியபடி சொல்லிக்கொண்டு சாப்பாடு முடிந்ததும் வெற்றிலை போட்டுக்கொண்டு, ஸந்தோஷமாக விடைபெற்று வீடு திரும்பினார்கள்.

அன்று முதல் அநேகர் வீட்டிலும் யூனிபார்மாகச் சாப்பிடுவதுதான் நாகரிகமாக இருக்கும் என்று குழம்புக்கு என்ன போடுகிறார்களோ, அதையே போட்டு கறி கூட்டு எல்லாம் செய்கிறார்களாம்.

(426-ம் பக்கத் தொடர்ச்சி)

நமது இந்தியாவின் முடிசூடா மன்னரும், ஒப்பற்ற தலைவருமான காந்திஜியின் உபதேசம் நிறைவேறுமானால் இக்கூக்குரல் ஒருவாறு சாந்தமடையும். அவ்வுபதேசம் தான் "சர்க்கா" நூல் நூற்றல். இந்தியாவின் ஏழரை லக்ஷம் கிராமங்களிலுள்ள திக்கற்ற மக்களுக்கு உயிரளிக்க வேண்டுமானால், இந்தியாவின் பண்டையகௌரவத்தைநிலைநாட்ட வேண்டுமானால், உடனே கிராமங்களுக்குச் சென்று, குடிசைகள் தோறும் கைராட்டையைப் பரப்புங்கள். பஞ்சை உற்பத்தி செய்யச் சொல்லுங்கள். கைத்தறியை நிறுவுங்கள். பேசிப் பேசிக் கழித்த காலம் போதும். இனியும் காரியத்தில் இறங்காவிடில் பயனில்லை. சர்க்காவைப் பரிஹஸிப்பவர்களுமிருக்கிறார்கள். அவர்கள் ஒருக்கால் பண மெத்தையில் படுத்துறங்கும் கோடீஸ்வரர்களாக இருக்க வேண்டும், இல்லையேல் திண்ணைத் தூங்கிச்சோம்பேறிகளாக இருக்க வேண்டும். அவர்களுடைய வார்த்தையைக் கேட்கக் கிராமத்தில் யாருமில்லை.

ஒவ்வொரு கிராமமும் ஒரு சர்க்கா சங்கமாக ஆகவேண்டும்; அப்பொழுதுதான் குடிசையின் குரல், தீனக் குரல், மாறிச் சந்தோஷமுடையதாக மாறும். கிராமங்கள் விழிப்படைந்தா லொழிய நாடு விடுதலை பெற முடியாது.

குத்பா பரிசு

[ஏ. முகம்மது ரஷீத், தஞ்சை]

அன்றுதான் ரம்ஸான் மாதத்தின் முதல் பிறை. நாஸினி அல்லாவிடம் மிக வும் பயந்தவளானபடியால் இஸ்லாம் மதத் தின் கோட்டைத் தாண்டாதபடி ரோஸா (நோன்பு) வைத்திருந்தாள். தன்னுடைய ஏழு வயது பேரன் சாப்ஜானுக்கு வாங்கிய ஆப்பம் ஒருகிழிந்த பாயின்மீதுகிடந்தது.

எங்கிருந்தோ சாப்ஜான் துள்ளி ஓடி வந்தான். அவன் முகமண்டலம் நிறையப் புது ஆச்சரியமும் ஆவலும் மலிந்து வழிந் தன.

“ஏன் நானி*......இப்பொழுது ரம் ஸான் மாதமா?...இன்னும் சில நாட்களில் குத்பா ஓடிவந்து விடுமா? அடுத்த வீட்டு யாகூப் சொன்னானே!” என்று கேள்வி களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கினான்.

நாஸினிக்கு இவன் சொன்னதெல்லாம் காதில் விழவில்லை. தன்னுடைய ஒரே செல்வப் பேரனுக்குக் குத்பாவிற்கு ஒரு நல்ல கைலி, ஜிப்பா, லேஞ்சு வாங்கவும் கதியற்றவளாய் இருப்பதை எண்ணி மனம் நொந்து கிடந்தாள். தன் வலக் கையிலிருந்த கொப்பளத்தை இலேசாகத் தடவியவாறு ஏதோ நினைத்துக்கொண்டு நின்றாள்.

“என்ன நானி கையிலே?” என்று சாப் ஜான் நெருங்கி வந்தான். கொப்பளத் தைக் கண்டதும் அவன் சிறு உடல் பதறியது.

“நானி!...எப்படி நானி இது வந்தது? ...இரத்தம் வருமோ?......மிகவும் வலி யாகக்கூட இருக்குமோ?........” என்று அவன் கபடமற்ற இதயம் முன்னிருந்த உற்சாகத்தை எல்லாம் மறந்து, கவலை பொங்க, அநேக கேள்விகளைக் கேட்டது.

பேரனின் நிர்மலமான புனித வாஞ்சை யைக் கண்டு நாஸினி இலேசாக நகைத் துக்கொண்டாள்.

“ஒன்றுமில்லை, பாவா!......அடுப்பில் நெருப்பைக் கையால் தள்ளும்பொழுது ஒரு துண்டு பட்டுவிட்டது............சரி, அதோ ஆப்பமிருக்கின்றது. தின்று கொஞ்சம் ‘நீர்ச்சோறு தண்ணி’யைக் குடி” என்று ஆர்வம் பொங்க, மிகவும் வாத்ஸல்யத்துடன் சொன்னாள்.

“நானி, உனக்கு ஆப்பம் வேண்டாமா? ......யாகூப் சொன்னான் குத்பாவிற்காக அதிக நாள் பெரியவர்களெல்லாம் பட் டினி கிடக்க வேண்டுமாமே?......”

சாப்ஜான் பதிலைக் கேட்கவும் நிற்க வில்லை. வெளியில் யாகூப், ஹுஸேன், அமீர் முதலியவர்களுடைய குரல்கள் கேட்டன. ஆப்பத்தைக் கையில் எடுத்துக் கொண்டு ஓடிவிட்டான்.

2

சாப்ஜான் ஏழையின் வயிற்றில் பிறந் தான் என்பதில்தான் கொஞ்சமும் சந்தே கமே இல்லையே! பெற்றோரைத்தான் கொடுத்து வைத்தானா? அதுவுமில்லை. அந்தச் சிறு பாலகனின் தலையில் அவ்வ ளவு கோரமாக எழுத்து இருந்தது.

பிறந்த ஏழெட்டு மாதங்களுக்குள் தாய், ஏதோ ஜுரத்தில், நிம்மதி யடையச் சென்றுவிட்டாள். மனைவி இறந்ததி லிருந்து சாப்ஜானின் தகப்பனுக்கு ஒரே ஏக்கம் பிடித்துக்கொண்டது. என்றாலும் தன் குழந்தையைக் கவனித்துக் கொள் வதில் அவன் சிறிதேனும் தவறவே இல்லை. ஆனால் இதுகூட அந்த ரஹிமா னுக்குப் பொறுக்கவில்லையோ என்னவோ? தகப்பனையும், ஊரில் காலராவை விட்டு, தன்னிடம் அழைத்துக்கொண்டான். நல்ல வேளை! அந்த அல்லா அந்தப் பாலகனை அனாதையாய் விட்டுவிடாதபடி அவன் நானி நாஸினியிடமாவது விட்டு வைத் தான்.

---

* நானி - பாட்டி

சாப்ஜானைத் தன் ஏழ்மை நிலைமைக்குத் தக்கவாறு எவ்வளவோ அருமையாகத் தான் வளர்த்து வந்தாள் நாஸினி. சாப்ஜானும் வெகு சீக்கிரத்தில் தன் பாட்டியிடம் மிகவும் பற்றுதலடைந்து விட்டான். "பாபு ரூபாய் சம்பாதிக்கப் போயிருக்கின்றார்; அம்மா அல்லாவிடம் போய் எனக்காக நல்ல நல்ல சாமான்களெல்லாம் வாங்கிவரப் போயிருக்கின்றாள்" என்று அவன் அடிக்கடி தன் நானியிடம் சொல்லுவான். அப்பொழுது குமுறிப்பொங்கும் துக்க வெள்ளத்தை அப்படியே அடக்கியவாறு நாஸினி விம்முவாள். என்றாலும் அவன் சொல்லுவதை ஒட்டியே பேசுவாள். குழந்தையின் முகமும் பூரண திருப்தியில் மலர்ந்துவிடும். ஆம்! நம்பிக்கை என்பது எவ்வளவு அற்புதமான விஷயம்! அதுவும் குழந்தைகளின் கபடமற்ற நம்பிக்கை! அவர்கள் கற்பனைசக்தி கடுகையும் மலையாக்கி விடுமே!

3

கடைசியில் ஈதும் வந்தது; அதுதான் பண்டிகை தினம். கிராமத்தில் ஒரே அல்லோலகல்லோலமாக இருந்தது. பக்கத்து நகரத்திலுள்ள ஈத்காஹ் (குத்பா அன்று தொழும் இடம்) விற்குப் போகவேண்டிய ஏற்பாடுகள் தடபுடலாக நடந்துகொண்டிருந்தன.

சிறுவர்களுக்கோ அன்று மிகவும் கொண்டாட்டமாக இருந்தது. சென்ற முப்பது தினங்களாக என்றுவரும், என்று வரும் என்று ஏங்கிக்கிடந்த அவர்களுக்கல்லவா அதன் உண்மையான அருமை தெரியும்! தினமும் குத்பா என்ற பெயரை ஜபித்துக்கொண்டே இருந்தார்கள். அந்தக் குத்பாவும் இன்று உண்மையாகவே வந்து விட்டது. ஏன் பெரியவர்கள் இன்னும் ஈத்காஹ்விற்குப் போகப் புறப்படவில்லை என்று ஒரே தவிப்பாக இருந்தது அவர்களுக்கு!

இவர்கள் ஜேபிகளில் குபேரனுடைய ஐச்வர்யம் நிரம்பி இருந்தது. அடிக்கடி பையிலிருக்கும் தங்கள் கஜானாவை மிகவும் களிப்போடு எடுத்து, எண்ணிப் பார்த்து, மறுபடியும் பத்திரமாகப் போட்டுக் கொள்வார்கள்.

"ஒன்று... இரண்டு... மூன்று..." இப்படி ஆரம்பித்த அமீரின் எண்ணிக்கை பத்தில் வந்து முற்றுப்புள்ளியை அடைந்தது. ஆனால் ஹூஸேனே பதினாறு வரையில்கூட எண்ணினான்... இவர்கள் இந்த எண்ணமுடியாத நாணயங்களைக் கொண்டு என்னென்ன ஆஸ்திகளை வாங்கப்போகின்றார்கள்! எவ்வளவு தின்பண்டங்கள் தின்னப்போகின்றார்கள்! ஊதல், பொம்மை, காற்றாடி, மிட்டாய், காலணா கலர், பழங்கள்... அப்பப்! அவர்களைக் கேட்டுப் பார்த்தாலல்லவா தெரியும் அந்த கணக்கற்ற ஜாப்தா!

ஆனால் எல்லோரையும்விடச் சாப்ஜானுக்குத்தான் மகிழ்ச்சியில் தலைகால் புரியவில்லை. அவனுடைய மாசற்ற மனம் என்னவோ குபேரசம்பத்து வந்துவிட்டது போல, ஆனந்தத்தில் வெகுதூரம் ஆழ்ந்திருந்தது. இவ்வளவிற்கும் அவன் காலில் செருப்பில்லை. சுத்தமாகத் தோய்க்கப்பட்டிருந்த ஒரு கைலியையும், கொஞ்சம் கிழிந்த ஒரு சட்டையையும் தான் அவன் அணிந்திருந்தான். தலையில் அழுக்குக் குல்லாய். எப்படி இருந்தபோதிலும் அவன் திருப்திக்குக் கொஞ்சம்கூடக் குறைவில்லை.

நானி நாஸினி தன் குடிசையில் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள். இன்று ஈத்! ஆனால் சாப்பாட்டிற்கு ஒன்றுமில்லை. தன் பிள்ளை இருந்தால் இப்படி இருக்குமா? குழி விழுந்திருந்த அவளுடைய கண்களிலிருந்து மிகவும் வெப்பமான இரு நீர்த்துளிகள் கீழே விழுந்து சிதறின.

எப்படியோ, சொக்காய் தைத்தும், வீடுகளுக்குத் தண்ணீர் கொண்டுவந்து ஊற்றியும் ஒரு பத்தணா வரையில் நாஸினி பத்திரப்படுத்தி வைத்திருந்தாள். ஆனால் அந்தப் பால்காரி சண்டைபோட்டு எட்டணா பிடுங்கிக் கொண்டுபோய் விடுவாள் என்று அவள் கண்டாளா என்ன? "பாக்கி இரண்...ட...ணா கா....சு" என்று அர்த்தமில்லாமல் நாஸினி முணுமுணுத்துக் கொண்டாள். என்ன இல்லாவிட்டாலும்

சாப்ஜானுக்குக் கொஞ்சம் பாலாவது கொடுக்காவிட்டால் அவள் தளர்ந்த இருதயம் உடைந்துவிடும்... ஓரணு பால், காலணு ரொட்டி... சரி இது போதும். கொஞ்சம் குலாப்ஜான்... ஒரு காலணு இருந்தால் போதும். ஆனால் குழந்தையின் கையில் இரண்டே இரண்டு காலணு கொடுத்தால் அவள் துவ்விய மனம் மற்றச் சிறுவர்களைக் கண்டு ஏங்கிவிடாதா?... முக்காலணுவாவது கொடுக்கவேண்டும்............

அவள் மனம் பல திசைகளிலும் சாறு பிழிபட்டுக் கொண்டிருந்தது. அப்பொழுது துள்ளி ஓடிச் சாப்ஜான் வந்தான்.

"நானி! எல்லோரும் ஈத்காஹ்விற்குப் போகப் போகின்றார்கள். நானும் கூடச் சென்று சிக்கிரமாக வந்துவிடுகின்றேன்" என்று மிகவும் ஆவலோடு கூறினன்.

கிழவியின் நெஞ்சம் துடித்தது. எல்லாப் பிள்ளைகளும் தங்கள் பாபுவுடன் போகின்றார்கள். ஆனால் சாப்ஜான்?.... இல்லாவிட்டால் சிறு குழந்தையை வீட்டிலா வைத்துக் கொள்வது?

நானி யோசனை பண்ணுவதைக்காணச் சாப்ஜானுக்குக் கொஞ்சம் பயமேற்பட்டது. ஒரு வேளை அவள் மறுத்துவிடுவாளோ?

"இல்லை நானி! நான் எல்லோருக்கும் முன்னால் வந்து விடுகின்றேன். கொஞ்சமும் பயப்படாதே" என்று தேறுதல் சொல்லுவது போல ஆரம்பித்தான்.

நாஸினியால் மறுக்கமுடியவில்லை. என்றாலும் தன் சிறு சாப்ஜான் இரண்டு மைல்கள் நடக்க வேண்டுமே!......கடைசியில் எப்படியோ உத்தரவு கொடுத்தாள். பாலகன் சிட்டுக்குருவிப் போலப் பறந்தோடி விட்டான்.

4

கிராமத்திலிருந்து ஊர்வலம் போலக் குத்பா தொழுகைக்குச் செல்லும் கூட்டம் புறப்பட்டது. மற்றக் குழந்தைகளோடு சாப்ஜான் சென்றான். திடீரென்று அவன் 'போட் மெயில் ஸ்பீடி'ல் கிளம்பி ஓடுவான். ஒரு பெரிய மரத்தடியில் போய் நின்று கொள்வான். "சே! பெரியவர்களாம்... அவர்கள் ஏனிப்படி மெதுவாக நடக்கின்றார்கள்?" என்று தனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொள்வான். அவன் கால்களில் பரீ (தேவதை)யின் இரண்டு இறக்கைகள் அன்று மாத்திரம் ஒட்டிக் கொண்டிருக்கவேண்டும். இல்லையெனில் அவனுக்கு ஏன் களைப்பே தோன்றவில்லை? ஒரு வேளை மனம் நிறைய இருந்த குதூகலத்தாலும் இருப்பியானுமா?

ஆச்சு! கிராமம் தாண்டியாய்விட்டது. நகரத்தின் எல்லையையும் கூட்டம் அடைந்தது.

முதலில் ஹல்வாக் கடைகளும், மிட்டாய்க் கடைகளும் வரிசையாக வந்தன.

"அப்பா! இவ்வளவு மிட்டாய் விற்கிறானே யார் சாப்பிடுவார்கள்?... அடே கௌஸ்! இந்த மிட்டாயை எல்லாம் தினம் ஒரு பூதம் விலைக்கு வாங்குமாம். எங்கள் அப்பா சொன்னார், நிஜமான ரூபாய்கூட கொடுக்குமாம்" என்று ரஸாக் தனக்குத் தெரிந்த ஒரு குட்டி விஷயத்தை அவிழ்த்து விட்டான்.

சாப்ஜானுக்கு இது சரியாகப் புரியவில்லை. "பூதத்திடம் ஏது ரூபாய்?" என்று வினவினன். இதற்குள் எல்லாப் பிள்ளைகளும் அந்தச் சம்பாஷணையில் கலந்து கொண்டார்கள்.

வஹாப்:—பூதத்திற்கா ரூபாய் அகப்படாது? ஒரு நிமிஷத்தில் கஜானாவில் புகுந்தால்... அந்த இரும்புக் கதவுகளெல்லாம் எந்த மூலை அதற்கு?

சாப்ஜான்:—பூதம் மிகவும் பெரிதாக இருக்குமோ?

சையத்:—அடேயப்பா! ஆகாயத்திலே இருந்து பூமி வரையில் புகைபோல இருக்குமாம். ஆனால் அதை வசப்படுத்தினால் ஒரு கோப்பையில்கூட அடக்கிவிடலாம்.

சலாம்:—எப்படி அதை வசப்படுத்த முடியும்?

சையத்தின்:—எனக்குக் கொஞ்சம் தான் தெரியும். நம் ஊரில் மௌலானா இருக்கின்றாரல்லவா அவருக்கு இதெல்லாம் நன்றாகத் தெரியும். ஏதாவது கன்றுக்

குட்டி காணாமல்போனால்கூடப் பூதம் மௌலானாவிடம் சொல்லி விடுமாம். அன்று ஹக்கினுடைய எருமைக் கன்றுக் குட்டி எங்கேயோ போய்விட்டதை மௌலானாதான் பூதத்திடம் கேட்டுச் சொன்னாராம்.

இதற்குள் மிட்டாய்க் கடைகள் மறையப் பெரிய பெரிய கட்டிடங்களும், பங்களாக்களும் தென்பட்டன. சாப்ஜானுக்கு அந்தச் சம்பாஷணையை எல்லாம் கேட்டுக்கொண்டு போகும்பொழுது உலகமே ஞாபகத்திலில்லை.

"இது கோர்ட்; இது கிளப்; இது காலேஜ்... அடே! இவ்வளவு பெரிய காலேஜில் எத்தனை பையன்கள் படிப்பார்கள்! ஏய், எல்லோரும் பையன்களில்லை, டோய்! பெரிய பெரியவர்களெல்லாரும், மீசை முளைத்தும் படிக்கின்றார்கள்! ரொம்ப வேடிக்கையாக இருக்கும்"—இப்படி எல்லாம் அவன் மற்ற பையன்களுடன் பேசியவாறே தன்னையே மறந்து சென்றுகொண்டிருந்தான்.

கடைசியில் ஈத்காஹ்வை அடைந்தார்கள். பெரியவர்களெல்லாரும் வரிசை வரிசையாக நின்றார்கள். கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் இவர்கள் கூட்டமே. சாப்ஜானின் கிராமத்தைச் சேர்ந்தவர்களும் வந்து சேர்ந்தார்கள். இங்கு எல்லோரும், அல்லாவின் முன்னால் சமம் தான். ஆஹா! பார்க்க எவ்வளவு ரம்மியமாக இருந்தது! ஆயிரக் கணக்கான தலைகள் சேர்ந்தாற்போலச் சேவித்து, சேர்ந்தாற்போலத் தலைநிமிர்ந்து சேர்ந்தாற்போல உட்காரும் காட்சி!

5

நமாஸ் முடிந்தது. எல்லோரும் கிளம்பினார்கள். இனிமேல் மிட்டாய், பொம்மைகள் எல்லாம் வாங்கிக்கொண்டு ஊருக்குப் போக வேண்டும்.

சிறுவர்களெல்லாரும்போட்டி போட்டுக்கொண்டு பொம்மை வாங்கினார்கள். சாப்ஜான் அவர்களைக் கண்டு பரிகாசம் செய்தான். "கீழே தவறி விழுந்தால் உடைந்துவிடும். தண்ணீர் பட்டால் வர்ணம் போய்விடும். இதற்கா காசைக் கொடுப்பது" என்று அவன் சொல்லிக்கொண்டிருந்தான். என்றாலும் அப் பொம்மைகளைத் தொட்டுப் பார்க்க வேண்டுமென்ற ஒரு அற்ப ஆசை அவனிடம் ஏற்படாமல் போகவில்லை.

குதிரை, ஒட்டகை, எருது, யானை முதலிய பொம்மைகளுடைய இராட்டினங்கள் பல சுற்றிக்கொண்டிருந்தன. மஜீத், குதூஸ், ரஹீம் எல்லாம் ஏறி உட்கார்ந்து சுற்றினார்கள். சாப்ஜான் தூரத்தில் நின்றுகொண்டிருந்தான். மயக்க மடைவதற்காகத் தன் பொக்கிஷத்தை அவன் வீணாக்க விரும்பவில்லை.

பிறகு பிள்ளைகளெல்லோரும் ஏதேதோ வாங்கித் தின்றார்கள். தஸ்தகீர் தான் ஷர்பத் குடிக்கப் போவதாகச் சொல்லிச் சாப்ஜானைக் கூப்பிட்டும் பார்த்தான். சாப்ஜானிடம் முக்காலணாவுமிருந்தது. ஆனால் அவன் ஷர்பத் குடிக்கப் போகவில்லை.

அவன் கவனம் ஷர்பத் கடைக்குப் பக்கத்திலிருந்த இரும்புக் கடையில்தான் சென்று லயித்திருந்தது. கடைக்காரனிடம் வந்து, ஒரு சும்டா (குறடு)வைக் கையில் எடுத்துக்கொண்டு, "இந்தச் சும்டா என்ன விலை?" என்று கேட்டான்.

"ஓரணா" என்றான் கடைக்காரன்.

சாப்ஜான் முகத்தில் கவலை தோன்றியது. குறைத்துக் கேட்டால் கடைக்காரன் திட்டுவானோ என்ற பயம் வேறு. நெஞ்சைக் கொஞ்சம் திடப்படுத்திக்கொண்டு, "முக்காலணாவிற்குக் கொடுப்பாயோ?" என்று கேட்டான்.

கடைக்காரன் திட்டவில்லை. அவன் பையன் கேட்ட விலைக்கே கொடுத்தான்.

சிறுவன் முகத்தில் ஏற்பட்ட சந்தோஷத்தின் சின்னம் அவனுடைய மின்னும் கண்களால் தெளிவாகத் தெரிந்தது. உலகத்திலேயே சிறந்த விளையாட்டு சாமானைப் பெற்றுவிட்டவன் போல ஜம்பமாக நடந்துசென்றான், அந்தச் சும்டாவைத் தோளில் துப்பாக்கிபோலச் சாத்திக்கொண்டு.

இவனைக் கண்டதும் பாஷாவிற்குச் சிரிப்பு வந்துவிட்டது. "என்ன சாப்ஜான்

இது? இதை என்ன செய்கிறது?" என்று நகைத்தவாறே கேட்டான்.

"என்னவா? நீங்களும் விளையாட்டுச் சாமான் வாங்கினீர்களே! இதோ பார்! இதைக் கழுத்தில் வைத்துக்கொண்டால் துப்பாக்கி. கையில் எடுத்துக்கொண்டால் கத்திரி......எங்கே, என் சம்டாவை நான் விட்டெறிகின்றேன்; நீங்கள் உங்கள் பொம்மையை வீசுங்கள். பார்க்கலாம்..."

"ஐயோ! நாம் இதை வாங்காமல் காசை எல்லாம் செலவழித்து விட்டோமே!" என்று அங்கிருந்தவர்களில்சிலர் ஏங்கினர்.

குலாம் ஒரு தம்பூர் வாங்கி இருந்தான்.

"சாப்ஜான்! என் தம்பூரைக் கொடுக்கின்றேன். பதிலுக்கு உன் சம்டாவை இதற்குக் கொடுக்கின்றாயா?" என்று ஆசையைத் தாளாமல் கெஞ்சிக் கேட்டான்.

ஆனால் ஒரு அலட்சியப் பார்வை சாப்ஜானிடமிருந்து கிளம்பி அந்தத் தம்பூரை ஒரு தடவை நோக்கியது.

"ஹூம்!...உன் தம்பூர் எந்த மூலை? இந்தச் சம்டாவை விட்டால் உன் தம்பூர் வயிற்றை எல்லாம் கிழித்து எடுத்து விடுமே! ஒரு கயிற்றைக் கட்டினால் என் சம்டா 'டிங் டிங்' என்று கூடப் பாடும். உன் தம்பூரைப் போல நெருப்பு, தண்ணீர் பட்டால் என் சம்டா கெட்டுவிடுமா?" என்று அறைகூவி வீரன்போலக் கம்பீரமாக மொழிந்தான்.

சம்டாவின்மீது எல்லோருக்கும் மோகம் உண்டாகி விட்டது. "கொஞ்சம் கொடு; தொட்டுப் பார்க்கிறேன்......... நீ என் பொம்மையைப் பார்" என்று எல்லோரும் தாங்கள் வாங்கி இருந்த பொருள்களை நீட்டினர். சாப்ஜான் இதற்கு ஒரு ஆட்சேபனையும் சொல்லவில்லை.

இப்படியே கிராமத்தை நோக்கி அந்தச் சிறு கூட்டம் நகர்ந்தது.

6

"நானி!......நானி!!......"

ஆர்வம் பொங்கி வழியும் இந்த அன்புக் குரல் சாப்ஜானுடையதுதான். பன்னிரண்டு மணிவரையில் இன்னும் வாராததால் கலங்கி இருந்த நாஸினி வாரிச் சுருட்டி எழுந்து ஓடிவந்து சாப்ஜானை அப்படியே அணைத்துக் கொண்டாள். அவள் முத்த மிட்டு அவனைக் கீழே விட்டவுடன், "இந்தா நானி சம்டா" என்று கொடுத்தான் அவன்.

"சம்டாவா?...ஏது?..."

"நான் வாங்கினேன் நானி"

"வாங்கினயா? காசு ஏது?"

"நீ முக்காலணா கொடுக்கவில்லையா?"

"அந்தக் காசுக்கா வாங்கினாய்?"

சாப்ஜான் தலையை உற்சாகமாக அசைத்தான்.

"இது என்ன அசட்டுப்பிள்ளை! பன்னிரண்டு மணி வரையில் ஒன்றும் வாங்கித் தின்னாமலிருந்துவிட்டு இந்தச் சம்டாவை வாங்கி வந்திருக்கின்றாயே!" என்று கடிந்து கொள்ளும் பாவனையில் நாஸினி சொன்னாள். தான் கொடுத்த அந்தச் சொற்ப காசிற்காவது மிட்டாய், ஷர்பத் வாங்கித் தின்ன வில்லையே என்ற வருத்தம்தான் அவளுக்கு.

சாப்ஜான் அவள் சொன்னதைக் கேட்டுக் கொஞ்சம் வருத்தமடைந்தான். நானியை வருந்தச் செய்துவிட்டோமே என்ற கவலை அவனை வாட்டிற்று.

"நானி...நானி...நீ ரொட்டி எடுக்கும் பொழுது தினமும் உன் கைவிரல் சுட்டுப் போகின்றது. அன்றுகூட நான் கொப்புளத்தைப் பார்த்தேன். இது இருந்தால் சுடாது...அதற்காகத்தான் நானி நான் வாங்கினேன். உனக்குத்தான் கடைக்குப் போகவே அவகாசம் கிடைப்பதில்லையே" என்று தழதழத்துக் கூறினான்.

கிழவி ஒரு கணம் ஒன்றும் தோன்றாமல் பிரமித்து நின்றுவிட்டாள். பேச முடியாமல் நாக்குழறினாள். தன் பேரனின் அன்பு அவள் பிள்ளையின் ஞாபகத்தை மூட்டியது. செய்வதறியாமல் அப்படியே குழந்தையைத் தடவிக் கொண்டாள். அவள் சுருங்கிய கைகள் கண்களை மெதுவாகத் துடைத்துக் கொண்டன.

நான் ஸன்லைட் சோப் உபயோகிக்க ஆரம்பித்ததிலிருந்து உங்கள் ஷர்ட் அதிக வெண்மையாகவே தோன்றுகிறது.

நான் ஸன்லைட் சோப் உபயோகிக்கத் திரும்பினதைப்பற்றி மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். கச்சடா சோப்புகளை வாங்குவதால் சிலவு குறையலாம், ஆனால் அதனால் பணம் மீராது. ஏனெனில் சுத்தம் செய்யவல்ல நுரையை அவை அளிப்பதில்லை. சோப்பில் உள்ள நுரைதான் துணிகளை சுத்தம் செய்கிறது. தேவைக்கு மிஞ்சி அளிக்கும் ஸன்லைட் ஸோப்பின் நுரையை உபயோகிப்பது சிக்கனமானது. ஒவ்வொருவரும் நம் ஆடைகள் சுத்தமாயும், புதிய தோற்றமுள்ளதாயுமிருக்கின்றன என்று கூறுகிறார்கள். மேலும் ஸன்லைட் அவைகளுக்கு நறுமணம் அளிக்கிறது.

உண்மையான

ஸன்லைட் சோப்

இம்மாதிரி பெட்டிகள் ஒன்றில்தான் விற்கப்பட்டுவநகிறது

LEVER BROTHERS (INDIA) LIMITED S. 17-50 TM

காணமற்போன மோதிரம்

[ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாசன், பெங்களூர்]

சுந்தரமய்யருடைய தவப்புதல்வி பத்மா விற்கு இந்த வருடம்தான் கலியாண மாயிற்று. தலைதீபாவளிக்கு மாப் பிள்ளையை அழைத்து நூதன தம்பதி களுக்கு மங்கள ஸ்நானம் செய்வித்துப் பண்டிகையை மிகவும் சிறப்பாக நடத்த வேண்டுமென்பது அய்யரின் ஆசை. மாம னாரின் அழைப்புக் கடிதத்தைக் கண்ட சங்கரன் வெகு ஆனந்தத்துடன் முக்கிய மாகத் தனது காதலியைக் காணவெண்ணி வெகு குதுகலத்துடன் பண்டிகைக்கு முதல் நாள் காலை வண்டியிலேயே சேலம் வந்து சேர்ந்தான். பத்மா வின் தமையன் கோபாலன் ஸ்டே ஷனுக்கு வந்து மாப்பிள்ளையை எதிர் கொண்டழைத்து வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அய்யரின் மனைவி சரஸ் வதியம்மாள், மாப்பிள்ளைக்கு விதவித மான, ருசிகரமான பக்ஷணம், பலகாராதி களைப் பரிமாறி, உபசரித்தாள்.

சுந்தரமய்யர் சேலம் ஜில்லாவில் ஜட்ஜாக இருந்தார். மாப்பிள்ளை சங்கரன் எம்.பி.பி. எஸ். பரீக்ஷையில் தேர்ச்சியடைந்தவுடன், சென்னையில் மயிலாப்பூரில் சொந்தமாக ஷாப் வைத்து சிகிச்சை செய்யலானான். கொஞ்ச காலத்திற்குள்ளாகவே அவனது கைராசியாலும், புத்திசாலித்தனத்தினு லும், சத்குணங்களினாலும், சாமர்த்தி யத்தினாலும் கனவான்கள் முதல் பரம ஏழைகள் வரையிலும் பலர் திரள்திரளாக டாக்டர் சங்கரனிடம் சிகிச்சை பெற்று வர ஆரம்பித்தனர். அவனுக்கு மாதம் ஐந்நூறு ரூபாய்க்கு மேல் வரும்படி கிடைக்க ஆரம்பித்தது. இவ்வித குணசீலனை மாப்பிள்ளை கிடைத்ததைக் கண்டு சுந்தரமய்யரும், சரஸ்வதியம்மா ளும் மிகவும் களிப்புற்றனர்.

டாக்டர் சங்கரன் சேலம் வந்து சேர்ந்த மத்தியானம், சாப்பாடு முடிந்தவுடன், சுந் தரமய்யர் கோர்ட்டிற்குச் சென்றுவிடவே, சங்கரன் தனக்கென்று ஒழித்துவிடப்பட் டிருந்த அறைக்குச் சென்று, அவ்வறை யின் சுவரில் மாட்டப்பட்டிருந்த புகைப் படங்களை ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுது கோபா லன், கையிலொரு 'ஹிந்து' பத்திரிகை யைப் பிடித்தவண்ணம் உள்ளே பிரவே சித்தான். சுந்தரமய்யர் தம் குழந்தைகள் சிறு குழந்தைகளாக விருந்தபொழுது அவர்களின் கும்பல் புகைப்படமொன்றை எடுத்து இருந்தார். அந்தப் படத்தைச் சங்கரன் சுட்டிக்காட்டியவாறு "கோபாலா இந்த க்ரூப் போட்டோவில் எல்லோரை யும் கண்டுபிடித்து விட்டேன். ஆனால் உன் னருகில் நிற்கும் அந்தப் பிள்ளை யார்? எனக்குத் தெரியவில்லையே?" என்று வின வினான்.

இந்த வார்த்தைகளைச் செவியுற்ற கோபாலன் பெருமூச் செறிந்தவாறு "அவன் எனது பிரிய சிநேகிதன் நாரா யணன். அவனுடைய வரலாறே ஓர் பெரிய கதை" என்றுசொல்லிக்கொண்டே மிகவும் விசனத்துடன் ஓர் நாற்காலியில் உட்கார்ந்தான்.

சங்கரனும் கோபாலனின் அருகில் மற் றொரு நாற்காலியில் உட்கார்ந்தவாறு "கோபால், அவனது வரலாற்றைத் தான் கொஞ்சம் சொல்லேன் கேட்போம்" என்றான்.

கோபாலன்:—உங்களிடத்தில் எனக்கு ஓர்வித அந்தரங்க அன்பு இருப்பதால் இவ்விஷயத்தை விவரித்துக் கூறுமாறு என் மனது தூண்டுகிறது. ஆனால் நீங் கள் மட்டும் இந்தச் சமாசாரத்தை ஒரு வரிடமும் தெரிவிக்கலாகாதென்று உறுதி மொழி கேட்கிறேன்.

சங்கரன்:—அதற்கென்ன அப்படியே உறுதிமொழி தருகிறேன்.

கோபாலன்:—இந்தப் பையனின் பெயர் நாராயணன் என்பது. ஆனால் எல்லோரும் "அம்பி, அம்பி" என்றுதான் கூப்பிடுவது வழக்கம். ஒருநாள் இரவு எட்டுமணி இருக்கலாம். மழை மிகவும் ஜோராகக் கொட்டிக்கொண் டிருந்தது. ஒரே இடியும் மின்னலுமாக இருந்தது. வீட்டின் வெளிப்புறம் எட்டிப் பார்ப்பதற்குக்கூட மிகவும்பயங்கரமாக இருந்தது. குழந்தைகளனைவருமாகச் சாப்பிட உட்கார்ந்திருந்தோம். அப்பா மட்டும் கூடத்தில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது இந்த விடா மழையில் எங்கள் வீட்டு வாயிற்புறக் கதவருகில் "பவதி பிக்ஷாம் தேஹீ" என்ற சப்தம் கேட்டது. உடனே என் தகப்பனர் என்னை அழைத்துக் கதவைத் திறந்து யார் என்று பார்க்கச் சொன்னர். ஒரு சிறு பையன் உடம்பெல்லாம் தெப்பமாக நனைந்துபோயிருக்க, கையிலொரு பாத்திரத்தை ஏந்தியவாறு "வெட, வெட"வென்று குளிரினால் நடுங்கியவாறு நிற்பதைக் காண மிகவும் பரிதாபமாக விருந்தது. உடனே எனது தகப்பனரின் மனம் தணலைக் கண்ட மெழுகுபோல் கரைந்துவிட்டது. "இந்தப் பையனை உட்கார்த்தி ஒருவாய் சாதம் போடு பாவம்! மழையில் தெப்பமாக நனைந்து கிடக்கிறன். டேய் கோபால், ஓடிப்போய் உன்னுடைய ஒரு டவலையும், வேஷ்டியையும், பனியன் ஒன்றையும் கொண்டுவந்து கொடுத்து, அவனை உடம்பை நன்ருகத் துடைத்துக் கொண்டு, அவைகளை உடுத்திக்கொள்ளச்சொல்; இப்பொழுது இவ்விடமே சாப்பிட்டபிறகு, படுத்துத் தூங்கிவிட்டுக் காலையில் வீட்டிற்குச் செல்லட்டும்பாவம்!" என்ருர்.

பையன் குளிரினல் "வெட, வெட"வென்ருநடுங்கிய வண்ணம் "தர்மாத்மா, இந்த ஏழைக்கு இவ்வளவு உபசார மெதற்கு? ஒரு பிடி சாதம் போட்டால் போதும். நான் வீட்டிற்கு ஒரே ஓட்டமாக ஓடிப் போய்விடுகிறேன். இவ்வித மழையில் நான் எவ்வளவோ தடவைகள் நனைந்திருக்கிறேன். மழையில் நனைந்ததினல் என் உடம்பிற்கு கெடுதியொன்றும் ஏற்படாது. நான் இப்பொழுது வீட்டிற்கு போகாவிட்டால் என் சித்தி மிகவும் கோபித்துக் கொள்வாள்" என்ருன்.

எனது தாயாருக்கும் இந்த பேச்சு தான் வேண்டி இருந்தது. அவள் ஓர் கலெக்டரின் பெண். ஏழை எளியவர்களின் கஷ்டங்களைக்கொஞ்சம்கூட அறியாதவள். அனுபவித்தவளுமல்ல. அப்பாவோ அந்தப் பையனைப்போலவே ஆதியில் பரம ஏழையாக விருந்து அவனைப்போலவே சித்தியிடம் (மாற்ருந்தாய்) பலவித கஷ்டங்கள் அனுபவித்தவராய், பல தனவந்தர்களிடம் சென்று பொருளுதவிக்காக மன்ருடிச் சகாயம் பெற்று மிகவும் கஷ்டபட்டுப் படித்து முன்னுக்குவந்தவர். ஆதலால் அந்தப்பையனைக் கண்டவுடன் தமது பழைய நினைவுகளைப் படிப்படியாக நினைத்துக்கொண்டு அவனே தாம் என்று பாவித்து அவன் மேல் ஒப்பற்ற அன்பு கொண்டார். அம்மாவோ "என் குழந்தைகளுக்குச் சோறு படைத்து,அவர்களுடன் நானெப்போதும் பாடுபடுவதே ஈரேழுஜன்மங்களுக்கும் போதும். போதாக்குறைக்கு நீ ஒருவன் வந்து சேர்ந்தாயாடாப்பா! இந்தா, இந்தச் சோத்தைப்பிடி. வந்த வழியே போய்ச் சேர்" என்று கூறி, அவனுடைய பாத்திரத்தில் ஒருபிடி சாதத்தை போட்டுவிட்டு உள்ளே சென்றுவிட்டாள். ஆனல் என் தகப்பனர் இதற்கு இணங்கவில்லை.

சங்கரன்:—ஆனல், அந்தப் பையன் அன்று இரவு உங்கள் வீட்டிலேயே படுத்துத் தூங்கினனு?"

கோபாலன்:—ஆமாம் என் தகப்பனர் தாம் சாப்பிடும்பொழுது தம்மருகிலேயே அவனையும் உட்காரவைத்துக்கொண்டு சாப்பிடச்செய்து, படுக்கையும் கொடுத்து படுத்துக்கொள்ளச் சொன்னர். மறுநாள் காலை அவனது வரலாற்றைக் கேட்டு அறிந்தவராய், இனிமேல் தாம் அவனுக்கு மாதா மாதம் படிப்புச் செலவிற்கு உதவுவதாகவும்,மத்தியானப் பொழுது சாப்பாடும் போடுவதாகவும், காலைப் பொழுதிலும், மாலைப் பள்ளிக்கூடம் முடிந்த பின்னும் எங்கள் வீட்டிலிருந்துகொண்டு குழந்தைகளுக்கு விளையாட்டு காட்டும்படியாகவும்

அம்மாவிற்கும்சகாயம்செய்யும்படியாகவும் கூறினர். அப்பொழுது அம்பிக்குண்டான சந்தோஷத்திற்கு அளவே இல்லை. அவனது தகப்பனர் நல்ல கண்யமான குடும்பத்தில் பிறந்தவரானலும் கூட, காலகதியால் ஏழ்மைத் தாய் அவரைத் தழுவவே, சொத்து, சுதந்தரத்தை இழந்தவராய்த் தாலூக்கா ஆபீஸில் இருபத்தைந்து ரூபா சம்பளத்தில் ஓர் குமாஸ்தாவாக இருந்தாராம். அம்பியையும், அவனது மாற்றாந் தாயையும் தனியாக விட்டுவிட்டுத் திடீரென்று வைசூரி கண்டு இறந்துபோய் விட்டாராம். இருந்த ஒன்றிரண்டு காசு பணத்தையும் அம்பியின் சித்தி தனது பெயருக்கு எழுதி வைத்துக்கொண்டு அம்பியைப் படுத்தாத பாடுபடுத்திக் கொண்டிருந்தாள். போதாக் குறைக்கு எனது தாயாரும் அவன்மேல் பொறாமை கொண்டு அவனைக் கண்டால் சற்று வெறுப்பாகவே இருந்தாள். இப்பொழுது அதற்காகப் பச்சாத்தாபப்படுகிறாள். பயன் என்ன ?

சங்கரன் சொல்லத் தொடருகிறன் : “ அம்மாவிற்கு அவன்மேல் வெறுப்பு ஏற்பட காரணமென்ன ?

கோபால்:—“அவன் வெகு புத்திசாலி. படிப்பிலும் கேட்க வேண்டாம். ஒவ்வொரு வகுப்பிலும் பரீக்ஷையில் முதல் மார்க்கு தான் வாங்குவான். நான் நேர் மாராக “ டிம்கி ” அடிப்பேன். அப்பா அவனைப் புகழ்ந்து என்னை இகழ்ந்து பேசினல் அம்மாவிற்குக் கோபம் வந்துவிடும். “ என்னவென்றாலும் அவன் தெருவில் செல்லும் நாய். அவனுக்காக நம்குழந்தையை வைவதா ? இந்த வருஷ மில்லாவிடில் அடுத்த வருஷம் பாஸ் செய்கிறன் நம் கோபு” என்று எனக்குப் பரிந்துகொண்டு வருவாள்.

அம்பி “ தினந்தோறும் விடியற்காலம் ஐந்து மணிக்கே எழுந்து வந்துவிடுவான். வெந்நீர் அடுப்பை மூட்டிவிட்டு,குழந்தைகளுக்குப் பல் துலக்கிப் பால் கொடுத்துவிட்டு அவர்களுக்கு பாடம்சொல்லிக் கொடுப்பதிலோ, விளையாட்டு காட்டுவதிலோ முனைந்து விடுவான். நடுநடுவில் அம்மா கூறும் வேலைகளைச் செய்வான். கடையிலிருந்து காய்கறி வாங்கி வருவதும் சமயலுக்குக் கறிகாய் நறுக்கிக் கொடுப்பதுமன்றி, கூடமாடக் குழம்புக்குக் கூட்டுக்கு அரைத்துக் கொடுத்தும், இலைபோட்டுப் பரிமாறியும், சாப்பிடும் கூடத்தை தயாராக சித்தப்படுத்தியும், பல வகை வேலைகளையும் ‘துரு, துரு’ வென்று கொடிப்பொழுதில் செய்துவிடுவான்.சாயந்திரம் பள்ளிக்கூடத்திலிருந்து நேராக எங்கள் வீட்டிற்கே வந்துவிட்டு, குழந்தைகளை உலாவ அழைத்துச் செல்வதோ, அம்மா இட்டவேலையைச் செய்வதோ செய்துவிட்டு ஏழுமணிக்குச் சரியாகத் தனது சித்திக்கு ஒத்தாசைசெய்வதற்கும், படிப்பதற்கும் வீட்டிற்குச் சென்றுவிடுவான். படிப்பதற்காக அவனுக்கு அற்பப் பொழுதுதான் கிடைக்குமானலும் கூட வகுப்பில் அவன்தான் முதல் ஸ்தானம் வகித்துவந்தான். எங்கள் வீட்டில் அவன் இவ்வளவு வேலைகளும் செய்துவந்ததற்கு, அவனுக்கு என் தகப்பனர் மாதாமாதம் கொடுத்துவந்த இரண்டு ரூபாய் ஸ்கூல்பீசும், மத்தியானம் ஒருபொழுது சாப்பாடும் தான் எங்களால் மாற்றுபகாரம். அம்மாவிற்கு அந்த இரண்டு ரூபாய்கள் கொடுப்பதிலும் இஷ்டமில்லை. அவனை அம்மா வீட்டிலிருந்து எவ்விதமாவது துரத்திவிடவேண்டுமென்று சமயம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு ஞாயிற்றுகிழமை யன்று அம்மா ஒரு தலையணையைத் தைத்துக்கொண்டிருந்தாள். குழந்தை பத்மா அம்மாவினருகில் உட்கார்ந்துகொண்டு அம்மாவின்மோதிரத்தைப் பிடுங்கிக்கொண்டு ஓடியாடிக்கொண்டிருந்தாள். அம்மா அம்பியைக் கூப்பிட்டு, குழந்தையை அப்புறம் எடுத்துச் சென்று விளையாட்டுக் காட்டும்படி கட்டளையிட்டாள். அவனும் அவளை எடுத்துச் சென்றான். வெகு நாழிகைக்கப்புறம் சாயந்திரம் சமைக்கும்பொழுது அம்மாவிற்கு மோதிரத்தின் நினைவு வந்தது. உடனே அம்பியை அழைத்து மோதிரம் எங்கே என்று கேட்டாள். அம்பி தான் அதைப் பார்க்கவே இல்லை என்றான். வீடு முழுவதும் வலைபோட்டுத் தேடிப் பார்த்தும் மோதிரம் கிடைக்கவில்லை. அம்மா அம்பி

தான் மோதிரத்தைத் திருடி யிருக்க வேண்டுமென்று ஒரே உறுதியாகக் கூறி விட்டாள். அம்பியோ தான் சத்தியமாக அதைக் கண்ணுல்கூடக் காணவில்லை என்று புலம்பினன். கடைசியில் அம்மா வின் இஷ்டப்படியே அவன் வீட்டிலிரு ந்து துரத்தப்பட்டான்" என்று கூறி முடி த்துக் கோபாலன் மௌனம் சாதித்தான்.

சங்கரன் "அவன் இப்பொழுது எங்கே இருக்கிறன்?" என்று வினவினன்.

"கதையை முழுவதும் கேளுங்கள். அம்பி சென்றதிலிருந்து பத்மாவும், சந்துருவும் சதா அவனை நினைத்துக் கொண்டு அழுவார்கள். பத்மா சிறு குழந் தையாதலால் அவளைக் கொஞ்சம் மறக் கடிக்க முடிந்தபோதிலும் சந்துருவைச் சமாதானம் செய்ய முடியவில்லை. அந்த ஏக்கத்திலேயே சந்துருவிற்கு ஜுரம்கூட வந்துவிட்டது. இரவும் பகலும் அம்பியைப் பற்றியே பிதற்றிய வண்ணம் இருந்தான். இந்தக் கண்றுவியைப் பார்க்கச் சகியாமல் அம்பியை அழைத்து வரும்படி அம்பி அகத்திற்கு ஒரு ஆளை அனுப்பினர்கள்.

"அம்பி காணமல் போய்விட்டானென் றும், ஏழு எட்டு நாட்களாக அவனைப் பற் றியதகவலே காணேம் என்றும் அவனது சித்தன்னையும், அவளது தாயாரும் சாந்த மாகச் சொல்லி யனுப்பிவிட்டார்கள். பின் எங்குதான் போயிருப்பான்? அவனுக் கிருக்கும் உற்றர் உறவினர் டெல்லியி லிருக்கும் ஒரே ஒரு அத்தைதான். அவளிடம் செல்வதற்கும் அவனிடம் ஒரு பைசாகூடக் கிடையாது. மேலும் அவள் இந்தப் பக்கம் வந்து அநேக வரு ஷங்களாய் விட்டதால், அவளுக்கு இவ் விடத்தின் பற்றே விட்டுப்போய் இருந் தது. எவ்வளவு பிரயாசைபட்டும் அவ னது இருப்பிடத்தை அறிய முடியவில்லை.

ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் இரவு எங்கள் வீட்டுப் பூனை சந்துரு படுத் திருந்த படுக்கைக்கு வந்து, அவனது தலை யணையின்மேல் மூத்திரம் பெய்து விட் டது. மறுநாள், அம்மாள் சேவகனைக் கூப் பிட்டு அந்தத் தலையணையைப் பிரித்துப் பருத்தியை வெயிலில் உலர்த்தச் சொன்னுள். பருத்தியுடன் அம்மாவின் காணமற்போன மோதிரமும் வெளியே விழுந்தது!"

சங்கரன் "அட பாவமே! அநியாய மாக அந்தப் பையன் மீது பழி சுமத்தினேளே!" என்று பொங்கினன்.

கோபாலனின் கண்களிலிருந்து கண் ணீர் ஆறுகப் பெருகலாயிற்று. தழதழத்த குரலில், "நாங்கள் மகா பாபிகள். அந்த உத்தமனை இந்த ஜன்மத்தில் கண்டு மன்னிப்பு பெறும் பாக்கியம்கூடப் பெற வில்லை..." என்றான். அதற்குமேல் அவனுல் பேச முடியவில்லை துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. சிறு குழந்தை யைப்போல் விம்மி விம்மி அழலானன். சங்கரன் பேச்சை மாற்ற வெண்ணி எழுந்திருந்து சென்று தனது சட்டைப் பையிலிருந்த பாக்கட் புக்கிலிருந்து ஒரு புகைப் படத்தை எடுத்துவந்து கோபாலனின் கையில் கொடுத்து "நான் போன மாதம் எடுத்துக்கொண்ட புகைப் படம் இது. நன்றாக இருக்கிறதா பார்" என்றான்.

படத்தைப் பார்த்தவுடன் கோபால னின் உடம்பு நடுங்கிற்று. ஒரே திக் பிரமை கொண்டான். சற்றுச் சமாளித்துக் கொண்டு "மாப்பிள்ளை! இதென்ன ஆச்சரியம்! அந்த குரூப் போட்டோ வின் ப்ரூப் காப்பின்னு இது! இதை நான் அம்பிக்குக் கொடுத்திருந்தேனே. உம் மிடம் இது எப்படி வந்தது?" என்று தடுமாறிய வண்ணம் வினவினன். சங் கரன் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. அடுத்த விநாடியில் கோபாலன் "அம்பீ, இப்பொழுதுதான் உன் பெயர் சங்கர நாராயணன் என்பது நினைவிற்கு வந்தது" என்று அவனை இறுகக் கட்டித் தழுவிக் கொண்டு ஆனந்த பாஷ்பம் சொரிய லானன்.

அப்பாஜியும் யானைகளும்

[எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி, மயிலாப்பூர்]

ஓர் பெரிய நகரத்தில் ஓர் வியாபாரி இருந்தான். அவனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். அவன் சாகுந் தறுவாயில், பிள்ளைகளைக் கூப்பிட்டு, "அன்புள்ள மைந்தர்களே, நான் இன்னும் சில நாட்களில் இறந்துவிடுவேன். என்னிடம் இருக்கும் செல்வம் அனைத்தையும் நீங்கள், பங்கிட்டுக்கொள்ள வேண்டும். எல்லா வஸ்துக்களையும் நீங்கள் சமமாகப் பங்கிட்டுக்கொள்ளுங்கள். ஆனால் என்னிடம் இருக்கும் பதினேழு யானைகளை மாத்திரம், நான் சொல்லுகிறபடி பங்கு போட்டுக்கொள்ளுங்கள். எப்படியென்றால், இந்தப் பதினேழு யானைகளில், பாதி யானைகள் மூத்தவனுக்கும், மூன்றில் ஒரு பங்கு இளையவனுக்கும், ஒன்பதில் ஒரு பங்கு மூன்றாமவனுக்குமாகப் பங்கிட்டுக்கொள்ளுங்கள்" என்று கூறிச் சில தினங்களுக்கெல்லாம் அவன் இறந்தான்.

அவன் இறந்தபிறகு, பிள்ளைகள் எல்லா வஸ்துக்களையும், சமமாகப் பங்கிட்டுக் கொண்டார்கள். ஆனால் யானைகளை மாத்திரம் பங்குபோட முடியவில்லை. பதினேழை, இரண்டு மூன்று, ஒன்பது, இவைகளால், வகுக்க முடியுமா?

கடைசியில் அவர்கள், "விஜய நகரத்து மந்திரி அப்பாஜியைக் கேட்போம்; அவர் முடியாது என்றால், உலகத்தில் எவராலும் முடியாது" என்று நினைத்து, அப்பாஜியிடம் சென்றார்கள். அப்பாஜி சமாசாரத்தைக் கேட்டு, சந்தோஷித்து, "சரி, நாளையதினம் உங்கள் வீட்டிற்கு வந்து, யானைகளைப் பங்கு போட்டுத் தருகிறேன்" என்றார்.

மறுநாள் அப்பாஜி தம்முடைய சொந்த யானையின்மீது ஏறிக்கொண்டு, அந்தப் பிள்ளைகளின் வீட்டை அடைந்தார். பதினேழு யானைகளும் வரிசையாக நிறுத்தப்பட்டன. உடனே அப்பாஜி, "என்னுடைய யானையையும் அவைகளோடு நிறுத்துங்கள். பிறகு மூவரும் தந்தை சொன்னபடி பங்கை எடுத்துக்கொள்ளுங்கள்" என்றார். முதல் பிள்ளை ஒன்பது யானைகளை எடுத்துக்கொண்டான்; இரண்டாவது பிள்ளை மூன்றில் ஒரு பாகமான ஆறு யானைகளை எடுத்துக்கொண்டான். மூன்றாவது பிள்ளை ஒன்பதில் ஒரு பாகமான இரண்டு யானைகளை எடுத்துக்கொண்டான்.

உடனே அப்பாஜி, "மூவரும் சேர்ந்து எடுத்துக்கொண்டது பதினேழு யானைகள்தான். பாக்கியிருக்கிற என்னுடைய யானையை நானே எடுத்துக்கொள்கிறேன்" என்றார். எல்லோரும் அப்பாஜியின் சாமர்த்தியத்தை மெச்சினார்கள்.